Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா   செய்தி : 021 493 0000   விளம்பரம் : 021 493 1111

சுடர் :35   கதிர் :27   மார்கழி 07ஆம் நாள்   திங்கட்கிழமை   23 டிசெம்பர் 2019   வள்ளுவர் ஆண்டு 2050

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

உணவருந்தியதும் மயங்கி வீழ்ந்தவர் உயிரிழந்துள்ளார். நவாலி வடக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சண்முகராசா அம்பிகைபாகன் (வயது-64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள் 23

## விபத்தில் காயமடைந்தவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 23

மோட்டார் சைக்கிள் மோதி மயங்கி வீழ்ந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர் நேற்று உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக் 23

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் முப்படையினர் சோதனை

## வாள்வெட்டுக் குழுக்களை கட்டுப்படுத்தவாம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 23

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய யாழ்ப்பாணத்தில் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் நேற்றுத் தீவிர சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். கவச வாகனங்களில் வந்திறங்கிய படையினர் வீதிகளில் குவிக்கப்பட்டனர். வீடுகள், வீதிகள் என்று பல இடங்களிலும் தீவிர சோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டது. பாதுகாப்புத் தரப்பினரின் இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது. 05



## கஞ்சாவுடன் 2 பேர் கைது

### பொலிஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவேறு இடங்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகர் கோவில் பகுதியில் 3 கிலோ 500 கிராம் கஞ்சாவுடன் மாமுனையைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரைக் கைது செய்ததாக சிறப்பு அதிர 05

### மணல் கொள்ளைக்கு எதிராக

## மரத்தான் போராட்டங்கள்




யாழ்ப்பாணம், டிசெ. 23

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குடாரப் 23

### முச்சந்தி முரளி



வேதாளம் பழையபடி முருங்கைமரம் ஏறுது பாருங்கோ...

## நாடு முழுவதும் ஆயுதம் ஏந்திய முப்படையினர்!

### கோத்தா வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, டிசெ. 23

நாடு முழுவதும் பொதுப் பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்வதற்காக ஆயுதம் தாங்கிய படையினரை கடமையில் ஈடுபடுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார். 23




## வடக்கின் தாரகை ஆஷிகா

யாழ்ப்பாணம், டிசெ. 23

வடக்கு மாகாணத்தின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதான வடக்கின் தாரகை விருதை பளுதூக்கல் வீராங்கனை விஜயபாஸ்கர் ஆஷிகா பெற்றுக் கொண்டுள்ளார். வடமாகாணத்தின் வர்ண 23

### மக்களிடத்திலிருந்தே

## மாற்றுத் தலைமை உருவாகவேண்டும்

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, டிசெ. 23

அரசியல் கட்சிகளோ அல்லது நாமோ நினைத்து மாற்று அரசியல் தலைமையை உருவாக்க முடியாது. அது மக்கள் மத்தியிலிருந்து தானாக உருவாக வேண்டும். இவ்வாறு தமிழ்த் 23

### சர்வதேசத்துக்கு ஒருபோதும்

## அடிபணியாது ராஜபக்ஷ அரசு

### ஜெனிவாத் தீர்மானம் குப்பையில் வீசப்படும் என்கிறார் நீதி அமைச்சர் நிமல்

கொழும்பு, டிசெ. 23

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான அரசு வெளிநாடுகளுக்கோ அல்லது சர்வதேச அமைப்புகளுக்கோ ஒருபோதும் அடிபணியாது. இவ்வாறு நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

'இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்த அரசு ஒருபோதும் ஏற்காது. அந்தத் தீர்மானம் குப்பையில் தூக்கி வீசப்படும்' எனவும் 23

## அரசியல் பழிவாங்கல் வேண்டவே வேண்டாம்

### கோத்தா அரசிடம் ராஜித வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 23

கோத்தாபய அரசின் அரசியல் பழிவாங்கலின் முதல் இலக்கு சம்பிக்க ரணவக்க. அடுத்த இலக்கு நானே. இந்தக் கேவலமான நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் என்று கோத்தாபய அரசிடம் நான் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வெள்ளை வான் தொடர்பாக நடத்திய ஊடகவியலாளர் சந்திப்புகாக என்னைக் கைதுசெய்து சிறையில் அடைக்க கோத்தாபய அரசுதிட்டம்தீட்டியுள்ளது. அதனால்தான் நீதிமன்றத்தில் நான் முன்பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளேன், எனவும் அவர் குறிப்பிட்டார்.

'நாட்டின் அதியுயர் சபையான நாடாளுமன்ற விதிமுறைகளுக்கேற்ப இந்த அரசு செயற்பட வேண்டும்; நீதியின் வழியில் நடக்கவேண்டும்' எனவும் அவர் வலியுறுத்தினார்.

அரசு தன்னைக் கைது செய்யக் கூடும் என்று நினைத்து முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன் பிணை மனுவை மீண்டும் தாக்கல்செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த மனு இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ஒ,5,22)

## சிறுவனை தீண்டியது பாம்பு

சாவகச்சேரி,டிசெ.23

படுக்கையில் வைத்து 12 வயதுச் சிறுவன் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு முகமாலை இந்திராபுரத்தில் இடம்பெற்றது.

பாம்பினால் கடியுண்ட சிறுவன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (க-9)

### கோத்தாவின் அப்பாவித் தோற்றத்தைக் கண்டு

# ஏமாறாதீர்!!!

### தமிழ் மக்களைக் கோருகிறார் சரவணபவன் எம்.பி.





யாழ்ப்பாணம், டிசெ. 23

ஜனாதிபதி கோத்தாபயவின் எளிமையான தோற்றத்தையும், அவர் தனக்கான படைப்பாளங்களைக் குறைத்தைப்பார்த்தும் ஏமாந்து விடாதீர்கள். அவர்களின் சுயரூபம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தான் தெரியவரும். தமிழ் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச காரியாலயமும், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இணைப்புக் காரியாலயமும் காரைநகரில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடு இப்போது மோசமான கட்டத்துக்குள் சென்று கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி கோத்தாபயவின் வெளித்தோற்றத்தைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அவர்களின் சுயரூபம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தெரியவரும்.

இப்போதே தாங்கள் நினைத்ததை அவர்கள் செய்து வருகின்றார்கள். நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாமலே அவர்கள் மக்களை, அதிகாரிகளை அச்சுறுத்தி தங்கள் ஆட்டத்தைப் போடுகின்றனர்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அந்தச் சுயாதீன ஆணைக்குழு இருக்கத்தக்கதாக அவர்களையும் ஆட்டுவித்து தனக்கு விரும்பிய இடமாற்றங்களை அவர் செய்திருக்கின்றார். ராஜபக்ஷாக்களுடன் தொடர்புடைய மிகப் பெரிய வழக்குகளை விசாரணை செய்த, குற்றப் புலனாய்வுப் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை பதவிக்கு வந்ததுமே இடமாற்றினார்கள். வழக்கு விசாரணை செய்த அதிகாரியான நிஷாந்த சில்வா இவர்களுக்குப் பயந்து சுவிஸுக்கு அரசியல் தஞ்சம் கோரி ஓடிவிட்டார். பொலிஸாருக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

இப்படி ஆட்டம் போடும் ராஜபக்ஷாக்களுக்கு கொடி பிடிக்க தமிழர்களிலும் சிலர் இருக்கின்றனர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், ராஜபக்ஷாக்களின் பினாமிகளாக, எடுபிடிகளாக இங்கே தேர்தல் கேட்டு வருபவர்களை நீங்கள் விரட்டியடிக்கவேண்டும். தமிழர்கள் ஒற்றுமையாக, ஓரணியாக வாக்களிக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மாத்திரமே தமிழர்களின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யும் தீர்வைப் பெற்றுத் தரமுடியும். நாடாளுமன்றத்தேர்தலில் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும், என்றார். (ஒ -5)

### நீதிமன்றில் வைத்து தாக்குதல் நடத்தினரென

# 2 பெண்களுக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, டிசெ. 23

சங்கிலி அறுத்த நபரை அடையாளம் காட்ட நீதிமன்றுக்குச் சென்றிருந்த பெண்ணைத் தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த பெண் மற்றொருவருடன் கடந்த மாதம் 22 ஆம் திகதி கொடிகாமத்துக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

வரணி வாழைத்தோட்டம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது அவர்களை மோட்டார்சைக்கிளில் பின்தொடர்ந்து சென்ற இருவர் பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றிருந்தனர்.


அது பற்றி அந்தப் பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதேவேளை, மற்றொரு சம்பவம் கொடிகாமம் இராமாவில் பகுதியில் இடம்பெற்றிருந்தது. இங்கு சங்கிலியைப் பறிகொடுத்த பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இராமாவில் சங்கிலி அறுப்புத் தொடர்பில் கைது செய்யப்பட்டசந்தேகநபரைப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரை கடந்த புதன்கிழமை அடையாள அணிவகுப்பு உட்படுத்துமாறு நீதிமன்று பணித்திருந்தது. வரணியில் சங்கிலி பறிகொடுத்த பெண்ணையும் அன்றையதினம் சந்தேகநபர்களை அடையாளம் காட்டும் நடவடிக்கைக்கு வருமாறு பொலிஸார் அறிவித்திருந்தனர். அதன்படி அந்தப் பெண்நீதிமன்றுக்குச் சென்றிருந்தார்.

அவரை நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து இரு பெண்கள் அடையாளம் காட்ட வேண்டாமென்றுகூறி அச்சுறுத்தியுள்ளனர். இது தொடர்பாக அந்தப் பெண் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தார். அச்சுறுத்திய பெண்களில் ஒருவரையும் பொலிஸாரிடம் அடையாளம் காட்டினார். அடையாள அணிவகுப்பு நிறைவடைந்த பின்னர் சங்கிலியைப் பறிகொடுத்த பெண் நீதிமன்றிலிருந்து வெளியேறியபோது நீதிமன்ற வளாகத்தில் வைத்து முன்னர் அச்சுறுத்தியிருந்த பெண்கள் தாக்கியுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட பெண் குற்றஞ்சாட்டி பொலிஸில் மீளவும் முறைப்பாடு செய்தார்.

அந்த இரண்டு பெண்களையும் பொலிஸார் கைதுசெய்து மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தினர். இருவரையும் நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (து- 9)



## மகிந்தவின் புதல்வர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை

யாழ்ப்பாணம், டிசெ. 23

முன்னாள் ஜனாதிபதியும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷாவின் இளைய புதல்வர் யோசித்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்தார். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டுள்ளார். இதன்பின்னர் யாழ்ப்பாணத்தில்சுவரோவியங்கள் வரையப்பட்டு வரும் இடத்துக்குச் சென்று இளைஞர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (ஒ,5)

# சம்பிக்கவுடைய கைது ஜனநாயகத்தின் அழிவு

## விக்ரமபாகு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.23

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவை நாடாளுமன்றச் சம்பிரதாயங்களை மீறிக் கைது செய்தமை ஜனநாயகத்தையும், மக்கள் ஆணையையும் மீறும் செயற்பாடாகும் என்று நவ சமசமாஜக் கட்சியின் செயலாளர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது விபத்தொன்றை ஏற்படுத்தியதாகக் கூறப்படும், விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறியே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விடயத்தில் ஜனநாயக ரீதியாக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதியொருவரை கைதுசெய்வது என்பதுமக்களின் ஆணையைப் புறந்தள்ளும் செயற்பாடாகவே நாம் கருதுகிறோம். இது பாசிச காலத்தையே நினை வுப்படுத்துகிறது.

இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் பலத்தைக் கொடுத்து ஜனநாயகத்தை அழிக்கும் செயற்பாடுகள் தான் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனநாயகத்தைக் காப்பாற்றும் நபர்கள் இருப்பார்களாயின் நாம் அவர்களுக்கு இந்த வேளையில் அழைப்பு விடுக்கிறோம். இவ்வாறான புதிய கலாசாரங்களை அழிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். என்றார். (எ)

# மூன்று அதிகாரிகளது தலைக்கு மேல் கத்தி!

கொழும்பு, டிசெ.23

வாகன விபத்தொன்றை அடுத்துத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி சாரதியை மாற்றி, உண்மையை மறைத்துச் சாட்சியங்களை மாற்றியமைத்து நீதித்துறைக்கு மோசடி செய்தமை தொடர்பிலான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு, அந்தக் குற்றத்தைப் புரிய உடந்தையாக இருந்தமை தொடர்பில் மூன்று உயர் பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த விடயத்தில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு இதுவரை முன்னெடுத்துள்ள விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய, சட்ட மா அதிபர் வழங்கியுள்ள ஆலோசனைகளின் கீழ் இந்த மூவர் தொடர்பிலும் இறுதிக் கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அறிய முடிகி ன்றது. இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்ற 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேல்மாகாணத்துக்கு பொறுப்பாகவிருந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரும் தற்போது கட்டாய விடுமுறையின் கீழுள்ளவரும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்காமைக்கான குற்றச்சா ட்டுக்கு இலக்காகியுள்ள சந்தேக நபர்களில் ஒருவருமான பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர இந்த விடயத்தில் கைது செய்யப்படவுள்ள முக்கிய சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்தக் காலப்பகுதியில் வெலிக்கடை பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த தற்போதைய உதவி பொலிஸ் அத்தியட்சர் ஹஸ்மடல மற்றும் அப்போது வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியாக இருந்த பொலிஸ் பரிசோதகர் பெரேரா உள்ளிட்டோரும் இந்தச் சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்றும் அவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி மின்சக்தி எரிசக்தி அமைச்சுக்குச் சொந்தமான கே.பி.7545 எனும் ஜீப் வண்டியில் டபிள்யு.பி.டபிள்யு.ஏ.கே 2013 எனும் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது.

2016 பெப்ரவரி 28 ஆம் திகதி வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தவர் பொலிஸ் உத்தியோகத்தர் குமார என்பவரே. அவரை பொலிஸ் உத்தியோகத்தர் லக்ஷான் என்பவரே மேற்பார்வை செய்துள்ளார். வாக்கு மூலங்களைப் பதிவு செய்யும் போது தனக்கு லக்ஷான் கொடுத்த ஆலோசனைக்கு அமைய சம்பிக்க ரணவக்கவின் பெயரைத் தான் வாக்கு மூலத்தில் உள்ளடக்கவில்லை என உத்தியோகத்தர் குமார தற்போது வாக்கு மூலம் அளித்துள்ளார்.

தனக்கு அவ்வாறு செயற்பட ஆலோசனை கொடுத்தவர் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பெரேரா என லக்ஷானின் வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போது வெலிக்கடை பொலிஸ் பொறுப்பதிகாரி ஹஸ்மடலவே அதற்குரிய ஆலோசனைகளைத் தனக்குக் கொடுத்தார் என்று பொலிஸ்பரிசோதகர்பெரேராகூறியுள்ளார்.

ஹஸ்மடல இப்போது உதவி பொலிஸ் அத்தியட்சகராவார். இவற்றின் அடிப்படையில் அவருக்கும், அப்போது இந்த வாகன விபத்துத் தொடர்பில் நேரடியாகச் செயற்பட்டதாகக் கூறப்படும் தற்போது விளக்கமறியலில் உள்ள கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித்துக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

# தரையில் சம்பிக்க

கொழும்பு, டிசெ.23

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு மெத்தையோ, தலையணையோ வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அவர் வெறுத் தரையில் உறங்க வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படும் கைதி ஒருவர் முள்ளந்தண்டுப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தால் அவருக்குச் சிறைச்சாலை அதிகார்ரிகள் மெத்தை மற்றும் தலையணை வழங்குவது வழக்கம். கடந்த 19ஆம் திகதி சம்பிக்க ரணவக்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு முள்ளந்தண்டுப் பிரச்சினைகள் எவையும் இல்லை என்று சிறைச்சாலை மருத்துவர்கள், அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர். அதனால் அவருக்கு மெத்தையோ, தலையணையோ வழங்கப்படவில்லை என்றும், அதனால் அவர் தரையில் படுத்துறங்க வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# சம்பிக்க கைதில் நடந்தது என்ன?

## விளக்கம் கேட்கிறது ஆணைக்குழு

கொழும்பு, டிசெ.23

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டபோது, பின்பற்றப்பட்ட நடைமுறைகள் எவை என்பதை உள்ளடக்கி விரிவான அறிக்கை ஒன்றைத் தமக்குக் கையளிக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக் குழு பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரொருவர் கைது செய்யப்படுவாராக இருந்தால் அதற்காக வழமையாகப் பின்பற்றப்படும் நடவடிக்கை எதுவும் முறையாக பின்பற்றப்படாமல் சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், சம்பவம் தொடர்பான அறிவித்தல் கைது செய்யப்பட்டதற்கு அடுத்த நாளே தனக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது என்றும், பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி பொலிஸ் ஆணைக் குழுவுக்கு முறையிட்டு அது தொடர்பில் செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என்று கோரியிருந்தார். அதையடுத்தே தேசிய பொலிஸ் ஆணைக் குழு, பதில் பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் கே. டபிள்யூ.ஈ.கரலியத்தவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 18 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்கவை கைதுசெய்வதற்காக அவரது இல்லத்துக்குச் சென்றிருந்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் மூத்த பொலிஸ் அத்தியட்சர் நந்தன, மாலை 6.57 மணியளவில் தொலைபேசி மூலம் என்னைத் தொடர்பு கொண்டு விடயம் தொடர்பில் தெரியப்படுத்தினார்.

சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்ட போது வழமையாகப் பின்பற்றப்படுகின்ற நடைமுறை பின்பற்றப்படவில்லை என்று நான் நம்புவதோடு, இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் இந்தக் கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கி ன்றேன். என்றுள்ளது. (எ)

# கருவைச் சந்திக்கவுள்ள ஐ.தே.மு. உறுப்பினர்கள்

கொழும்பு, டிசெ.23

ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் மிக விரைவில் சபாநாயகர் கரு ஜயசூரியவைச் சந்தித்துப் பேசவுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கைது செய்ய்பபட்டமை தொடர்பாக முறைப்பாடு செய்வதற்காகவே ஐக்கிய தேசிய முன்னணியினர் அவரைச் சந்திக்கவ்ுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்ட போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக மீண்டும் விசாரணை செய்யவோ அல்லது சம்பிக்க ரணவக்கவைக் கைது செய்வதற்கோ புதிய ஆதாரங்கள் எவையும் இல்லை. இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை மட்டுமே என்றார். (எ)

## வட இலங்கைச் சங்கீத சபை
## யாழ்ப்பாணம்

**எழுத்துப் பரீட்சை / செய்முறைப் பரீட்சைகளுக்கான விண்ணப்ப முடிவுதிகதி நீடிப்பு - 2020**

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை சபையில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி **15.01.2020** வரை நீடிக்கப்பட்டுள்ளதோடு அப்படிவங்களைப் பூர்த்திசெய்து மீள சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி **25.01.2020** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா**
**தலைவர்,**
**வட இலங்கைச் சங்கீத சபை - யாழ்ப்பாணம்.**
**யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்.**

(m 12039) (13.17)

## சேவைநலன் பாராட்டு



யாழ் போதனாவைத்தியசாலையில்
30 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராக
கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச்
செல்லும் **திருமதி சிவராஜா சிவாஜினி**
அவர்களது சேவையை பாராட்டுவதோடு
ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக
பல்லாண்டு காலம் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச்சங்கம்.**
**போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம்**

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### 2020 இல் தூய்மையான பாடசாலை


கொக்குவில் இந்துக் கல்லூரியினை "2020 இல் தூய்மையான பாடசாலை" எனும் தொனிப்பொருளில் மாற்றியமைக்கும் செயற்பாட்டில் அதிபர், ஆசிரியர்கள், கல்லூரியின் கழகங்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் இணைந்து கல்லூரியினை சிரமதானப்பணி மூலம் தூய்மையாக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே குறித்த தினத்தில் பாடசாலையின் மற்றும் மாணவர்களின் நலனில் அக்கறையுடைய கல்லூரி சமூகத்தினர் அனைவரும் குறித்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**காலம்:- 28.12.2019 சனிக்கிழமை**
**நேரம் :- காலை 9.00 மணி**

**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(IN/12041)(11,17)







## "ஞானதீபம்" இளையோர் திறன்விருத்தி மையம்- அரியாலை

ஏழை மாணவர்களுக்காக நடத்திய அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில்
**(21.12.2019)** பரிசு பெற்றவர்களுடைய இலக்கங்கள்

**1ஆம் பரிசு - இல. 735**
**2ஆம் பரிசு - இல. 3675**
**3ஆம் பரிசு - இல. 6996**

**5 ஆறுதல் பரிசுகள் -7802, 9883, 1198, 8789, 7462**

**இயக்குநரும், இளையோரும்.**

உன்னை யாரும்
வெறுத்துவிட்டுப்
போகட்டும் நீ யாரையும்
வெறுக்காதே....

உன்னைப் பார்த்து
ஜன்னலைக் கூட
சாத்தியவர்களுக்கும்
சேர்த்தே நீ
உன் வாசற் கதவுகளைத்
திறந்து வை...

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
### ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 09. தேவாலய ஒழுங்கை. 33/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நல்லப்பா பாக்கியம் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி தெற்கு ஐயன் கணபதியும் பெண் தெய்வியும் நாகன் அப்பாக்குட்டியும் பிரசித்த நொத்தாரிசு சிவகுரு சிவராசா முகதாவில் 14.09.1956 ஆம் திகதியிடப்பட்ட 1924ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் நல்லப்பு பெண் பாக்கியத்திற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் தேவாலய வீதி. சாவகச்சேரியைச் சேர்ந்த தர்மலிங்கம் பெண் தெய்வீகராணி பிரசித்த நொத்தாரிசு தம்பையா வேலாயுதம் முகதாவில் 07.10.2001 ஆம் திகதியிடப்பட்ட 2133ம் இலக்கத்தில் நிறைவேறிய உருத்துவிளம்பல் உறுதி மூலம் நல்லப்புவும் பெண் பாக்கியமும் பிரசித்த நொத்தாரிசு எஸ். சுரேந்திரன் முகதாவில் 15.12.1979 ஆம் திகதியிடப்பட்ட 45ம் இலக்கத்தில் நிறைவேறிய ஒற்றி உறுதி மூலம் டச்சு வீதி. சாவகச்சேரியைச் சேர்ந்த தைப் ஐஸ்மினாவுக்கு ஒற்றி ஈடாகக் கொடுத்து ஆண்டனுபவித்து வந்துள்ளபடியாலும் நல்லப்புவுக்கும் பெண் பாக்கியத்துக்கும் தானே ஏகவாரிசாக இருக்கின்றபடியாலும் இவ்வாதனத்தையும் வீடு வளவையும் ஆண்டனுபவித்து தனக்கே விட்டிறந்த படியாலும் இவ்வாதனத்தின் உருத்தாளரும் சொந்தக்காரரும் தானே என்று வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் சாவகச்சேரியைச்சேர்ந்த தர்மலிங்கம் கைம்பெண் தெய்வீகராணி பிரசித்த நொத்தாரிசு காயத்திரி குமாரதேவன் முகதாவில் 07.05.2019 ஆம் திகதியிடப்பட்ட 1179ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் இல. 34/3C Ellie house வீதி, கொழும்பு-15 ஐச்சேர்ந்த ரெங்கநாதன் மகள் திவாணிக்கு அறுதியாக விற்றுள்ளார்.

பின்னர் தர்மலிங்கம் கைம்பெண் தெய்வீகராணியும் ரெங்கநாதன் மகள் திலானியும் பிரசித்த நொத்தாரிசு காயத்திரி குமாரதேவன் முகதாவில் 30.08.2019 ஆம் திகதியிடப்பட்ட 1259ம் இலக்கத்தில் நிறைவேறிய திருத்தல் உறுதி மூலம் குறித்த 1179ம் இலக்க உறுதியில் அறுதி வாங்குபவரின்பெயர் ரெங்கநாதன் மகள் திலானி என்பதற்குப் பதிலாக ரெங்கநாதன் திவாணி என குறிப்பிடப்பட்டமையாலும் ரெங்கநாதன் மகள் திலானி என்றே குறிப்பிடப்பட வேண்டும் என வெளிப்படுத்தி யுள்ளார்கள்.

ஆதன விபரம்
வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை "நம்பியார் வளவு" நிலப்பரப்பு (3)மூன்று. ஆனால் தற்போது இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.ஆறுமுகம் அவர்கள் 04.05.2019 ஆம் திகதியில் அளந்து வரைந்த 5530 ஆம் இலக்கப்படத்தின்படி துண்டு 1 எனச்சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு இரண்டு(2) குளி பதினைந்து தசம் நான்கு இரண்டு(15.42). இதற்கு எல்லை

கிழக்கும் வடக்கும்: ஒழுங்கை
மேற்கு: சின்னப்பு நாகேந்திரத்தின் ஆதனம்
தெற்கு: அரியநாயகம் பெண் தோமஸ்சின் ஆதனம்
இதடங்கலும் இன்னும் வடக்கொழுங்கைக்கு அருகாமையில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் பாவித்துரித்தும்.

தற்போது ரெங்கநாதன் மகள் திலானி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சிமன்றம்**
**சாவகச்சேரி.**

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
### ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 09. கண்டி வீதி. 361,361A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனம் T.சிவானந்தம் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை சாவகச்சேரி தெற்கு வல்லிபுரம் தாமோதரம்பிள்ளையும் பெண் இலட்சுமிப்பிள்ளையும் பிரசித்த நொத்தாரிசு இராமலிங்கம் டானியல் சிவகுரு முகதாவில் 18.06.1958 ஆம் திகதியிடப்பட்ட 860ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் தாமோதரம்பிள்ளை சிவானந்தம் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் மோகன் சிவானந்தன், முரளி சிவானந்தன் ஆகியோர் 12.07.2010ம் திகதிய S.இராமலிங்கம் பிரசித்த நொத்தாரிசு அவர்களது அற்றோனித்தத்துவத்தின் பிரகாரம் இல. 29-4/2. லில்லி அவனியு. வெள்ளவத்தை, கொழும்பு 06 என்னும் முகவரியைக்கொண்ட நீதா சதாசிவம் மூலம் பிரசித்த நொத்தாரிசு S.இராமலிங்கம் முகதாவில் 11.10.2010 ஆம் திகதியிடப்பட்ட 565ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் தந்தை இறந்த பின்னர் தாம் இருவரும்தான் இவ் ஆதனங்களின் உரித்தாளர்களெனவும் வேறு உரித்தாளர்கள் இல்லையெனவும் வெளிப்படுத்தி "காக்கையன் வளவும் கரடிக்குளியும்" நிலப்பரப்பு (2) இரண்டும் "நினைவன் வளவும் பறையன் வளவும் தோப்பு வளவும்" நிலப்பரப்பு (4) நான்குமாக இரு ஆதனங்களையும் தமக்குள் இருசம பங்காக பிரிவிட்டுள்ளனர்.

பின்னர் மோகன் சிவானந்தன், முரளி சிவானந்தன் ஆகியோர் 12.07.2010ம் திகதிய பிரசித்த நொத்தாரிசு S.இராமலிங்கம் அவர்களது அற்றோனித்தத்துவத்தின் பிரகாரம் இல.29-4/2. லில்லி அவனியு. வெள்ளவத்தை. கொழும்பு 06 என்னும் முகவரியைக்கொண்ட நீதா சதாசிவம் மூலம் பிரசித்த நொத்தாரிசு S.இராமலிங்கம் முகதாவில் 09.03.2012 ஆம் திகதியிடப்பட்ட 761 ம் இலக்க காணிமாற்று உறுதி மூலம் "காக்கையன் வளவும் கரடிக்குளியும்" நிலப்பரப்பு (2) இரண்டை மோகன் சிவானந்தனும் "நினைவன் வளவும் பறையன் வளவும் தோப்பு வளவும்" நிலப்பரப்பு (4) நான்கை, முரளி சிவானந்தனும் ஒருவருக்கொருவர் காணி மாற்றம் செய்துள்ளனர்.

பின்னர் நோர்வேயை வசிப்பிடமாகக்கொண்ட மோகன் சிவானந்தன் 11.07.2019ம் திகதி பதிவு செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு மு.குலசிங்கம் அவர்களது அற்றோனித்தத்துவத்தின் பிரகாரம் இல.29-4/2. லில்லி அவனியு, வெள்ளவத்தை, கொழும்பு 06 என்னும் முகவரியைக்கொண்ட நீதா சதாசிவம் மூலம் பிரசித்த நொத்தாரிசு பவித்திரா ராகவன் முகதாவில் 08.08.2019 ஆம் திகதியிடப்பட்ட 35ம் இலக்க அறுதி உறுதி மூலம் நடேசன் குகதாசனுக்கும் மனைவி அனுஷா குகதாசனுக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்
வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி இறை "காக்கையன் வளவும் கரடிக்குளியும்" நிலப்பரப்பு (2)இரண்டு.இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வ.சிவராசா 05.08.2019 ஆம் திகதியில் அளந்து வரைந்த 7083 ஆம் இலக்கப்படத்தின் படி துண்டு 1 எனச்சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு ஒன்று(1) குளி பூச்சியம் ஐந்து தசம் ஐந்து ஐந்தும்(05.55) இதற்குள்ளிருக்கும் கட்டடமும் இதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை

கிழக்கு: றோட்டு
வடக்கு: வல்லிபுரம் தாமோதரம்பிள்ளைக்கும் பெண் இலட்சுமிப்பிள்ளைக்கும் உரிய ஆதனம்
மேற்கு: சண்முகம் கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம்
தெற்கு: சண்முகம் கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனமும் றோட்டும்

தற்போது நடேசன் குகதாசனும் மனைவி அனுஷா குகதாசனும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சிமன்றம்**
**சாவகச்சேரி.**

## சிரிப்பு.....

எங்க வீட்டில நேத்து திருடன் புகுந்து...
எத்தினை பவுண் திருடிட்டு போயிட்டான்...
எல்லாம் அப்படியே இருக்குது...
சமையலறையில் இருந்த வெங்காயத்தை எல்லாம் தூக்கிட்டு போயிட்டான்...



## இரசாயனவியல் (Chemistry)

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் **தனி மற்றும்** குழு வகுப்புக்களாக தமிழ் **மற்றும்** ஆங்கில மொழி மூலத்தில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு - 077 238 4553

## தேவை வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொடர்பு:- 077 949 0903

## கோடிபதி கப்ருக லொத்தர் சீட்டு அபிவிருத்தி லொத்தர் சபையின் வரலாற்றில் இதுவரை உருவாகாத அதிகூடிய கோடிபதி வெற்றியாளருக்கு கௌரவ பிரதமரின் கரங்களால் காசோலை வழங்கப்பட்டது.



அன்று முதல் இன்று வரை அபிவிருத்தி லொத்தர் வரலாறு காணாத அதிகூடிய கோடிபதி ஜயமல்லத் தொகையான 145.029.213 ரூபாவை வெற்றியீட்டிய இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த திரு. குமார பிரியந்த அவர்களுக்குரிய காசோலையை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த திசெம்பர் மாதம் 18 ஆந் திகதியன்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமரும், தற்போதைய கௌரவ நிதி அமைச்சருமான மஹிந்த் ராஜபக்ஷ அவர்களின் திருக் காரங்களினால் அலரி மாளிகையில் வைத்து நடைபெற்றது. அவ் வெற்றிக்குரிய லொத்தர் சீட்டினை அபிவிருத்தி லொத்தர் சபையின் கீழ் சேவையாற்றும் கொடகவெல விற்பனை முகவரான திருமதி. ஆர்.ஜீ. சோமா பிரியந்தி அவர்களால் விற்பனை செய்யப்பட்டிருந்தது.மேலும். அபிவிருத்தி லொத்தர் சபையின் மிகப் பழமையான லொத்தர் சீட்டான சனிக்கிழமை அதிர்ஷ்டம் லொத்தர் சீட்டின் 3267 ஆம் வார சுப்பிரி ஜயமல்லத் தொகை 71.705.310 ரூபா பெறுமதியான பணப் பரிசை வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த திரு. டீ. கே. குமார அவர்களுக்குரிய காசோலையை கௌரவ பிரதமரின் கரங்களால் அத்தினமே வழங்கி வைக்கப்பட்டது. அவ் வெற்றிக்குரிய லொத்தர் சீட்டை அபிவிருத்தி லொத்தர் சபையின் கீழ் சேவையாற்றும் கொழும்பு விற்பனை முகவரான திரு. டி.என்.எஸ் குமார அவர்களால் விற்பனை செய்யப்பட்டிருந்தது.அச் சந்தர்ப்பத்திற்காக நிதி அமைச்சு மற்றும் திறை சேரியின் செயலாளர் திரு.எஸ்.ஆர். ஆடிகல அவர்கள், அபிவிருத்தி லொத்தர் சபையின் பதில் கடமையாற்றும் தலைவர் திரு. திலீப் சில்வா அவர்கள், பொது முகாமையாளர் அநுர ஜயரத்ன, பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) செல்வி விஜிதா சோமரத்ன, பிரதிப் பொது முகாமையாளர் (விற்பனை) திரு. ஷானக தொடங்கொடை அவர்கள் மற்றும் உதவிப் பொது முகாமையார் (நிதி) திரு. கசுன் ஜயசூரிய உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தார்கள்.



WesternUnion WU

PEOPLE'S BANK

இலங்கையில் முன்னணி வகிக்கும் வங்கிகளுள் ஒன்றான மக்களின் வங்கியாகக் கருதப்படும் மக்கள் வங்கியானது சமீபத்தில் தனது தலைமைக் காரியாலயத்தில் மக்கள் வங்கியின் வெஸ்ட்டர்ன் யூனியன் வாடிக்கையாளர்களுக்கான வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பை பெருமையுடன் நடாத்தியது.

மேலும் சந்தைப்படுத்தல் பிரச்சார நடவடிக்கைகள் மூலம் தமது வாடிக்கையாளரை அதிர்ஷ்டசாலிகளாக்கும் நோக்கில் வங்கியின் முன்னோக்கிய பயணத்தின் மற்றுமொரு படியாக நாட்டின் தமது பரந்த வாடிக்கையாளர் தளத்திற்கு அதியுன்னத சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்தும் முகமாக இந்நிகழ்வானது நடாத்தப்பட்டது.

சென்னை சுற்றுலாவிற்கான 10 விமானப் பயணச்சீட்டுக்களை வழங்குவதற்காக வெற்றியாளரை தேர்ந்தெடுக்கும் நிகழ்வானது மக்கள் வங்கியின் பிரதி பொது முகாமையாளர் (தொழில் முனைவோர் வங்கி நடவடிக்கைகள் ) திருமதி. கிரிஷாணி நாரங்கொட மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவை), திருமதி. அனோமா முத்துவ. உதவி பொது முகாமையாளர் ( சந்தைப்படுத்தல்) திரு. ஏ.யூ.ஏ. அன்சார் ஆகிய அதிகாரிகளின் தலைமையில் மக்கள் வங்கி தலைமைக்காரியாலயத்தில் நடந்தேறியது.


உலகில் எந்தவொரு நாட்டிலிருந்தும் இலங்கைக்கு உடனடியாக பணத்தினை அனுப்புவதற்கு இலகுவான முறையான வெஸ்ட்டர்ன் யூனியன் மூலமாக வாடிக்கையாளருக்கு பணத்தினை வழங்குவதில் நாட்டில் முன்னணி வகிக்கும் வங்கிகளின் முதன்மைப் பிரதி நிதியாக திகழ்வது மக்கள் வங்கியே ஆகும். இது வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புபவரால் இலங்கையிலிருக்கும் பணத்தினைப் பெற்றுக் கொள்பவருக்கு அறியத்தரும் இரகசிய இலக்கத்தினை (MTCN) வழங்கியும் அவரது அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலமும் உடனடியாகப் பணத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையாகும். எனவே வெஸ்ட்டர்ன் யூனியன் பணப்பெறுகையை மக்கள் வங்கியுடன் இன்னும் அதிகமதிகமாக செய்து கொள்வதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் அதிர்ஷ்டத்தை அடைந்திட மக்கள் வங்கி உங்களை அன்புடன் அழைக்கின்றது.

வெஸ்ட்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பப்பட்ட பணத்தினை 2019ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மக்கள் வங்கி கிளைகளினூடாக பெற்றுக் கொண்ட வாடிக்கையாளர்கள் இதற்கு தகைமை பெற்றிருந்தனர். அவ்வாறு சென்னை சென்றுவர வாய்ப்பினைப் பெற்றுக் கொண்ட 10அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரங்கள் பின்வருமாறு :

| பெயர் | கிளை |
|---|---|
| 1. திருமதி. டப்ளிவ். எச். எம். சந்திரலதா நாளனி | நொச்சியாகமை கிளை |
| 2. செல்வி. தட்சாயிணி தவகுலசிங்கம் | மல்லாகம் சேவை நிலையம் |
| 3. செல்வி. பீ.டீ.என். லக்சிக்கா அத்தபத்து | பிளியந்தலை கிளை |
| 4. திருமதி. டப்ளிவ். ஏ. தினூக்கா மதுஷானி | இரத்தோட்டை கிளை |
| 5. திருமதி. பாசமலர் வெள்ளச்சாமி | லுனுகலை கிளை |
| 6. திருமதி. அஜ்மு நிஸா பீபீ சுலைமான் | எந்தேரமுல்ல சேவை நிலையம் |
| 7. திருமதி. ஆர்.டீ. சமன்தி குமாரி | அங்கும்புர கிளை |
| 8. திருமதி. சௌக்காத் அலி நளீமா | கிண்ணியா கிளை |
| 9. திருமதி. எம்.ஏ.டீ சதானி புத்திக்கா | மொரட்டுமுல்ல கிளை |
| 10. திருமதி. டி.டீ.எல். விசுத்தி நானயக்கார | அத்திட்டிய சேவை நிலையம் |

**Issued by : MSLGROUP Sri Lanka**
**On behalf of: People's Bank**
For further information, contact: Ashfaaq Ashraf, email: ashfaaq.ashraf@mslgroup.com, call: +94701111859, +9411 - 2372080 and/or fax: +9411 - 2372088


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (24.11.2019) அன்று சிவபதமடைந்த எமதுகுடும்பத்தலைவர்

## அமரர் செல்லத்துரை தெய்வேந்திரன்

அவர்களின்

வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (24.12.2019) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருதைந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

"அன்னை இல்லம்"
MPCS Lane, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்

குடும்பத்தினர்
077 452 8842

## யாழ்ப்பாணக் ...

யாழ்ப்பாண நகரிலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நல்லூர் அரசடிப் பகுதியை மையமாக வைத்து நேற்று அதிகாலை முதல் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

பாதுகாப்புச் செயலர் ஊடாக வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாள்வெட்டுக் குழுக்கள், சமூக விரோதக் குழுக்களின் பெருக்கம் கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென, ஜனாதிபதியிடம் வடக்கு கிழக்கு ஆயர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று பாதுகாப்புத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ.5.106.111)

## 2 பேர்...

டிப் படையினர் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர் பருத்தித்துறைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

அவரிடம் இருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் கஞ்சாவும் பொலிஸில் கையளிக்கப் பட்டது.

காங்கேசன்துறை தல்சவென பகுதியில் 20 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கொக்குவிலைச் சேர்ந்த ஒருவரை காங்கேசன்துறைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். அவருடன் வந்த இருவரையும் சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(ஒ.5.26)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

## குமாரசாமி இரத்தினம்

(ஓய்வுநிலை கிளை முகாமையாளர், சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10.11.1947 | 26.12.2016 |

திதி: அபரபக்க துவாதசி

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
மூன்று ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா....
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை

குடும்பத்தினர்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.11.2019 அன்று சிவபதமடைந்த

## அமரர் தங்கம்மா கந்தையா

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (23.12.2019) திங்கட்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 25.12.2019 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**முகமாலை வடக்கு,**
**பளை.**

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இராசையா இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற மாநகரசபை மின்மாணி உத்தியோகஸ்தர்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.03.1941 | 22.12.2019 |

கச்சேரி நல்லூர் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராசரத்தினம் (ஓய்வு பெற்ற மாநகரசபை மின்மாணி உத்தியோகஸ்தர்) நேற்று **(22.12.2019)** ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஜெயராணியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான புண்ணியசிங்கம், பரமசாமி ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற வேந்தரமூர்த்தி மற்றும் நல்லம்மா, பரமநாதன், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(23.12.2019)** திங்கட்கிழமை பி.ப. **2** மணியளவில் **126/8,** கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பெறாமகன் இந்திரகாசன்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகரத்தினம் செல்லம்மா



தோற்றம் 23.05.1923 மறைவு 20.12.2019

யாழ் அல்வாய் கிழக்கு, துலாவையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் செல்லம்மா கடந்த **(20.12.2019)** வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாபிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் இளையமகளும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகரத்தினம் (சிறாப்பர்) அவர்களின் அன்பு மனைவியும் புவனேந்திரன் (அப்பு- முன்னாள் அலுவலகப் பொறுப்பாளர்- மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திசபை, பளை- O.I.C- JEDB) காலஞ்சென்ற பத்மினி (ஆச்சி- கனடா) மற்றும் குகேந்திரன் (சின்னப்பு- சுவிஸ்), சாந்தினி (லண்டன்), சறோஜினி (நெதர்லாந்து), ஞானேந்திரன் (குட்டி- லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசாம்பாள் சின்னையா, ஞானாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் கமலேஸ்வரி, இராஜலிங்கம், சீதாதேவி, சத்தியவடிவேலு, கணேசலிங்கம், ஞானசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜீவன், புஜீவன், சஜீவன், றஜிந்தன், றினோதன், சுஜித்தா, அட்சயா, விஷ்ணுகா, ஆராதனா, சாஜினி, சதன், சஜித்தா, றினோதா, சுஜன், தமிழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜக்ஷன், அக்ஷயன், ஷர்மினி, அவந்திகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(24.12.2019)** செவ்வாய்க்கிழமை காலை **8.00** மணிக்கு மகன் புவனேந்திரன் (அப்பு) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கண்டாவத்தை,**
**அல்வாய் கிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.-**

**+947 7604 7786 (அப்பு), + 942 1226 3047**



தோற்றம் 14 - 09 - 1935 மறைவு 22 - 12 - 2019

### திருமதி தில்லையம்பலம் அன்னபூரணம் (பேபி)


நவாலி ரங்கூன் இல்லத்ததைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்தவருமாகிய தில்லையம்பலம் அன்னபூரணம் நேற்று (22.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா கண்மணி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை கண்மணி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் சிவகுமார் (வாகன வர்த்தகர் - நவாலி, கோண்டாவில்), சிறிகுமார் (சுவிஸ்), யசோதா (ஆசிரியை - வ/ விபுலானந்த கல்லூரி), உதயகுமார் (சேகர், வாகனவர்த்தகர் - வவுனியா), நந்தகுமார் (சுவிஸ்), வசந்தகுமார் (பிரான்ஸ்), செந்தில்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி (சுமதி), சக்திதேவி, சுந்தரலிங்கம் (வவுனியா வளாகம்), மேரி ஆனந்தி, இளமதி, ஜெனட்நிறஞ்சினி, சத்தியப்பிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்கள்

### பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள் இராமலிங்கசர்மா



பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், சித்தன்குறிச்சி பூநகரியில் வசித்தவரும் தற்போது கைதடி தென்கிழக்கு, கைதடி என்னும் முகவரியில் வசித்த பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள் இராமலிங்கசர்மா நேற்று **(22.12.2019)** ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமஸ்கந்த குருக்கள் மனோன்மணி அம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான காசிலிங்க சர்மா கோகிலாம்பாள் தம்பதிகளின் மருமகனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் தனலஷ்மி, உதயதர்சினி, பரமேஸ்வரக்குருக்கள், திலகவதி, பிரியதர்சினி ஆகியோரின் தந்தையும் விக்கினேஸ்வரக்குருக்கள், கிஷ்ணராஜக்குருக்கள், மைதிலி, ஜெயவஷ்தாங்ககுருக்கள், பிரசன்னரூபக்குருக்கள் ஆகியோரின் மாமனாரும் ஷாகித்தியா, கீர்த்திக் காருண்யா, விருபாஷசர்மா, கீர்த்தனா, வைஷ்ணவி, ரித்திகா, ஜெயசங்கரி, தானுமாலயசர்மா, அவந்திகா, ஹரித்ரசர்மா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(23.12.2019)** திங்கட்கிழமை பகல் **12** மணியளவில் அவரது இல்லத்தில் வைத்து பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றங்கரை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:-077 472 2727** **தகவல்: குடும்பத்தினர்**



தோற்றம் 12 - 09 - 1940 மறைவு 22 - 12 - 2019

### திருமதி விசாலாட்சி கணபதிப்பிள்ளை

ஆவரங்கால் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி கணபதிப்பிள்ளை நேற்று (22.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் நவரத்தினம், இந்திராணி, சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்புச்சகோதரியும் செல்வேந்திரராணி, ராகு, குலம், கலா, பத்மினி, ரவிச்சந்திரன், இராஜகுமாரி, நாகேந்திரம் (ஆதவன் பாரஊர்தி உரிமையாளர்), ஆகியோரின் அன்புத்தாயாரும் ரதீஸ்வரி, வசந்தமலர், தவராசா, லோகேஸ்வரன், விக்கினேஸ்வரன் (பிள்ளையார் பாரவூர்தி உரிமையாளர்), றஜிதா ஆகியோரின் மாமியாரும் சுமணகுமாரி, நதீஸ், கௌசி, சுபாஸ் (அவுஸ்திரேலியா), இந்துஜா (சுவிஸ்), லக்ஸன், மிதிலன், வேணுஷா (கனடா), சஞ்சுதா, வஜீஜிரன், சஜிஸ்ணன், கன்சிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் இந்துஜன், தேனுசா, தர்சன், மைசா, நிகிஷா, ஆகேஷ், அஜய, பவிஷ்னா ஆகியோரின் பூட்டியும் சுந்தரரூபன், சுரேஸ்காந், தாமினி, கிருசாந்தன் ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் ஆவரங்கால் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (23.12.2019) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஆவரங்கால் கரதடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கனாவத்தை,**
**ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 271 9032**

# ரஜினியுடன் நடிக்கும் தனுஷ்?



நடிகர் தனுஷ் நடித்துள்ள பட்டாஸ் திரைப்படம் வருகிற பொங்கல் பண்டிகையையொட்டி வெளியாக உள்ளது. துரை செந்தில்குமார் இயக்கியுள்ள இந்தப் படத்தில் தனுஷ் இரட்டை வேடத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தைத் தொடர்ந்து கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனுஷ் நடித்து வருகிறார்.

இது அவருக்கு 40ஆவது படமாகும். இதன் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இதையடுத்து தனுஷின் 41ஆவது படத்தை மாரி செல்வராஜும், 42ஆவது படத்தை ராம்குமாரும் இயக்க உள்ளனர். இந்தப் படங்களைத் தொடர்ந்து தனது 43வது படத்தில் ரஜினிகாந்துடன் இணைந்து நடிக்க தனுஷ் முடிவு செய்துள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது. தற்போது, சிறுத்தை சிவா இயக்கத்தைத் தொடர்ந்து, ரஜினி அடுத்ததாக நடிக்கவுள்ள படம் தனுஷின் 43 ஆவது படமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.






## ருவீற்ஸ்...

**ச ப் பா ணி@manipmp**

உனது கண்ணில் ஒரு சிறிய மணல் விழுந்தால் போதும். உன்னால் இந்த பரந்த வானத்தைப் பார்க்க முடியாது
புத்தர்

(எதுவும் சிறியது என சாதாரணமாக எண்ணக்கூடாது என்பதை விளக்கும் ஆழமான கருத்து)

**கோழியின் கிறுக்கல்!!**

நல்ல பேச்சாளராகத் தெரிய நிறையப் படிக்க வேண்டிய அவசியம் எல்லாம் இல்லை,

முட்டாள்களின் முன் பேசினாலே போதுமானது!!

**முகமூடி™@mugamoodi1**

நீதி, நேர்மை, மனசாட்சிக்கு பயந்து நடப்பவனாக இருந்தால்,

அனைவரின் கண்களுக்கும் நீ கோமாளியாகத் தான் தெரிவாய்..!!

**செந்திலின்_கிறுக்கல்கள்**

மாமியார் மருமகள் சண்டையில் மாட்டிக் கொள்ளும் மகனாக விடுமுறையில் வீட்டில் உள்ளோர் கையில் டிவி ரிமோட் சிக்கித் தவிக்கிறது...!

## நாம் அனுபவித்த ஒரு சொர்க்கபூமி

நேரமில்லை என்பதை "மனம் இல்லை" என்றும் நிரூபிக்கொள்ளலாம்!

நான் செய்வது மட்டுமே சரி" எனும் தவறை அடிக்கடி செய்கிறோம்.

ஒரு நிமிடம் என்பது குறுகியதாகவோ, நீண்டதாகவோ தோன்றுவதை கடிகாரம் தீர்மானிப்பதில்லை. மனதும், சூழலும்தான்!

ஒன்றைப் புரிந்துகொள்ள முதலில் அது குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்!

பொழுதுகளைத் தூசி தட்டி புதுசு படுத்தித்தரும் வல்லமை குழந்தைகளுக்கான வரம்!



abe

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு பின்பே உங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன. எனவே நீங்கள் எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய மாணவர்களாக உங்களை வளப்படுத்திக்கொள்ள பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழி அறிவுகளையும், கணினி, இணையம் மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சி திறன் என்பவற்றையும் உள்ளடக்கிய Smart Up மூன்று மாதகால பயிற்சி நெறி

## Certificate in English

ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த ஆரம்பத்தினை பெற்றுக் கொடுக்கும். க.பொ.த.சாதாரணதரத்தில் ஆங்கில பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கான அடிப்படைப் பாடநெறி.

## Diploma in English

மாணவர்கள் அடிப்படை ஆங்கில அறிவுக்கு மேலதிகமாக அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆங்கில அறிவைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தும் பாடநெறி.

# Smart Up

ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் (MS Office, Internet & E-mail, Hardware, Graphic Designing), சிங்களம், Soft Skill மற்றும் ஆளுமை விருத்தி என்பவற்றை உள்ளடக்கிய ஒரு தீவிர பயிற்சிக் கற்கைநெறியாகும்.

- ✔ தனியார் நிறுவனங்கள், அலுவலகங்களில் உடனடி வேலைவாய்ப்பு ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு இப்பயிற்சி உதவியாக அமையும்.
- ✔ உயர்கல்வி நிமித்தம் பட்டப்படிப்பு அல்லது தொழிற் கற்கைநெறி ஒன்றைத் தொடர இருப்பவர்களுக்கு இப்பயிற்சி நெறி அடிப்படையாகவும் உந்து சக்தியாகவும் இருக்கும்.
- ✔ பாடநெறி முடிவில் சர்வதேச தரத்திலான மூன்று சான்றிதழ்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வர்.

◇ **Diploma in English**
◇ **Diploma in IT**
◇ **Certificate in Spoken Sinhala**



28.12.2019 இற்கு முன்பதாக பதிவு செய்பவர்களுக்கு பாடநெறிக் கட்டணத்தில் 50% கழிவு

## Diploma in Information Technology

தகவல் தொழில்நுட்பம், அடிப்படை கணினி அறிவுகளான MS Office, Computer Hardware, Basic Graphic Designing, Internet, E-mail & Social Media என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சிறந்த பாட நெறி ஆகும்.

உடன் அழையுங்கள்
**0777174443**
www.blccampus.edu.lk

**BLC CAMPUS**

QUEST INTERNATIONAL UNIVERSITY | LINCOLN UNIVERSITY COLLEGE | Recognized by:

**4th Lane, Brown Road, Jaffna.**
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

# வடக்கு உள்ளூராட்சி சபைகளின் தரமுயர்வு

# என்ன நடக்கின்றது?

உள்ளூராட்சி மன்றங்களைத் தரமுயர்த்துதல் மற்றும் புதிதாக உருவாக்குதல் என்பன உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான கொழும்பு அரசின் அமைச்சரது விதந்துரையின் மீது அமைச்சரவையின் அனுமதியுடன் செயற்படுத்தப்பட வேண்டியதாகும். இந்தச் செயன்முறையின் போது ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் சட்டரீதியான தொழிற்படு பரப்பு முறைப்படி அடையாளப்படுத்தப்பட்டு அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

புதிய பிரதேச சபைகளை உருவாக்குவதற்கும் ஏற்கனவே உள்ளவற்றைத் தரமுயர்த்துவதற்குமென காலத்துக்குக் காலம் நாடெங்கிலுமிருந்து கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகளை ஆய்வு செய்து புதிய உள்ளூராட்சி மன்றங்களையும் தற்போதுள்ளவற்றைத் தரமுயர்த்துவதற்கும் தேவையான நெறிமுறைகளை வகுப்பதற்கான குழுவொன்று சு.ஜயசுந்தர தலைமையில் 12 உறுப்பினர்களைக் கொண்டதாக நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் முன்னளிக்கப்பட்ட நெறிமுறைகளை உள்ளடக்கிய அமைச்சரவைப் பத்திரம் 2017ஆம் ஆண்டு அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவால் முன்வைக்கப்பட்டு அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமையவும் உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் அரசு வழங்கும் மானியத்திலன்றி தமது சொந்த வருமானத்தில் இயங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்ற எடுகோளுக்கு அமையவும் கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகள் தொடர்பில் ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் அதன் மாவட்டச் செயலர் தலைமையின் கீழ் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைச்சால் நியமிக்கப்பட்டது.

> வட மாகாணத்தில் ஆகக் கூடுதலாக வெலிஓயாவுக்கு தனிப்பிரதேச சபையை உருவாக்க வேண்டுமென 56 முன்மொழிவுகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான குழுவுக்குக் கிடைக்கப்பெற் றன. ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்கள் இந்த விடயத்தில் மிகமிகக் குறைந்த அக்கறையையே வெளிப்படுத்தியிருந்தனர். வட மாகாணம் தொடர்பில் பின்வரும் முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன.

மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் செயலர், மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர், மாவட்டத்துக்கான பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்டத்தின் மூத்த நில அளவை அத்தியட்சகர், மாவட்டத்தின் புள்ளிவிபரவியலாளர்.

இந்த நியமனம் தொடர்பில் அமைச்சால் 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நாளிதழ்களில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதுடன் பொதுமக்களிடமிருந்து முன்மொழிவுகளும் கோரப்பட்டிருந்தன.

**வெலிஓயா**

வட மாகாணத்தில் ஆகக் கூடுதலாக வெலிஓயாவுக்கு தனிப்பிரதேச சபையை உருவாக்க வேண்டுமென 56 முன்மொழிவுகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான குழுவுக்குக் கிடைக்கப்பெற்றன. ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்கள் இந்த விடயத்தில் மிகமிகக் குறைந்த அக்கறையையே வெளிப்படுத்தியிருந்தனர்.

வட மாகாணம் தொடர்பில் பின்வரும் முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றன.

**தரமுயர்த்தல்**

வவுனியா மாவட்டம், வவுனியா நகர சபையை 7 மாநகர சபையாகத் தரமுயர்த்துதல்.

**புதிதாக உருவாக்குதல் நகர சபைகள்**

**முல்லைத்தீவு மாவட்டம்**

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் சில வட்டாரங்களைப் பிரித்தெடுத்து முல்லைத்தீவுக்கு நகர சபையொன்றை உருவாக்குதல்.

**கிளிநொச்சி மாவட்டம்**

தற்போதுள்ள கரைச்சி பிரதேச சபையின் சில வட்டாரங்களைப் பிரித்தெடுத்து கிளிநொச்சிக்கு தனியான நகர சபை ஒன்றை உருவாக்குதல்.

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

தற்போதைய வடமராட்சி தென் மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் சில வட்டாரங்களைப் பிரித்தெடுத்து நெல்லியடி என்ற பெயரில் நகர சபையை உருவாக்குதல்.

தற்போதைய வலி வடக்கில் உள்ள பிரதேச சபையின் சில வட்டாரங்களைப் பிரித்தெடுத்து காங்கேசன்துறை நகர சபையை உருவாக்குதல்.

தற்போதைய வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் சில வட்டாரங்களைப் பிரித்தெடுத்து மானிப்பாய் நகரசபையை உருவாக்குதல்.

தற்போதைய நல்லூர் பிரதேச சபையை முழுமையாகவே நகர சபையாக தரமுயர்த்துதல்தற்போதைய வலி மேற்குப் பிரதேச சபையை முழுமையாக நகர சபையாகத்தரமுயர்த்துதல்

**புதிய பிரதேச சபைகளை உருவாக்குதல்**

**முல்லைத்தீவு மற்றும் வவுனியா**

தற்போதைய கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையில் இருந்தும் தற்போதைய வவுனியா வடக்கு பிரதேச சபையிலிருந்தும் சில வட்டாரங்களைப் பிரித்தெடுத்து வெலிஓயா பிரதேச சபையை உருவாக்குதல்.

தற்போதைய புதுக்குடியிருப்புப் பிரதேச சபையிலிருந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலக எல்லைக்குள் அடங்கும் வட்டாரங்களைப் பிரித்தெடுத்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கென ஒட்டுசுட்டான் பிரதேச சபையை உருவாக்குதல்.

**கிளிநொச்சி மாவட்டம்**

தற்போதைய கரைச்சிப் பிரதேச சபை பிரிவிலிருந்து கண்டாவளை பிரதேச செயலக எல்லைக்குள் அடங்கும் வட்டாரங்களைப் பிரித்தெடுத்து கண்டாவளைப் பிரதேச சபையை உருவாக்குதல்.

**யாழ்ப்பாண மாவட்டம்**

தற்போதைய வடமராட்சி கிழக்குப் பிரதேச சபையிலிருந்து வடமராட்சி வடக்கு பிரதேச செயலக எல்லைக்குள் அடங்கும் வட்டாரங்களைப் பிரித்தெடுத்து வடமராட்சி வடக்குக்கென தனியான பிரதேச சபையை உருவாக்குதல்

**மன்னார் மாவட்டம்**

தற்போதைய மாந்தை மேற்கு மற்றும் நானாட்டான் பிரதேச சபைகளிலிருந்து மடு பிரதேச செயலக எல்லைக்குள் அடங்கும் வட்டாரங்களைப் பிரித்தெடுத்து மடு பிரதேசத்துக்கென தனியான பிரதேச சபையை உருவாக்குதல்.

உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குதல் அல்லது தரமுயர்த்தலின் போது அந்தந்த மாவட்டத்துக்கான குழுக்கள் ஏற்கனவே அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட நியதிகளுக்கமைய அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் மற்றும் அவர்களுக்குக் கிடைக்கும் சேவைகள் தொடர்பில் ஆய்வு செய்து புள்ளிவிவரங்களைத் திரட்டி அதற்கமைய புள்ளிகளை வழங்கியிருந்தனர்.

நில அளவைத் திணைக்களத்தால் சபைகள் ஒவ்வொன்றுக்குமான எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்டு எழுத்து மூலமும் வரைபடம் மூலமும் வழங்கப்படுகின்றன.

இந்த முன்மொழிவுகள் புதிய அல்லது தரமுயர்த்தப்பட்ட சபைக்கு மட்டுமன்றி அந்தச் சபை பிரித்தெடுக்கப்பட்டு எஞ்சியுள்ள பகுதிக்கான சபைக்கும் (உதாரணமாக கரைச்சிப் பிரதேச சபையிலிருந்து கண்டாவளைப் பிரதேச சபை மற்றும் கிளிநொச்சி நகர சபை என்பன பிரித்தெடுக்கப்பட்ட பின் எஞ்சிய கரைச்சிப் பிரதேச சபை) தயாரிக்கப்படுகின்றது.

இந்தக் கோரிக்கைகள் வட மாகாண பிரதம செயலர் செயலகத்தால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு செவ்வை பார்க்கப்பட்ட பின்னர் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்கு முன்னளிக்கப்படுகிறது.

இன்று வரை வவுனியா மாநகர சபைக்கான முன்மொழிவு, மடு பிரதேச சபைக்கான முன்மொழிவு நல்லூர் மற்றும் சுன்னாகம் நகர சபைகளுக்கான முன்மொழிவுகள் தவிர்ந்த ஏனைய சகல முன்மொழிவுகளும் அமைச்சுக்கு முன்னளிக்கப்பட்டுவிட்டன. நல்லூர் மற்றும் சுன்னாகம் ஆகிய உத்தேச நகர சபைகள் இடையிலான எல்லைப் பிணக்கு தற்போது தீர்க்கப்பட்டுவிட்டதாகவும், விரைவில் அந்த அறிக்கைகள் கையளிக்கப்படும் எனவும் யாழ். பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதே போல வவுனியா, மன்னார் மாவட்ட அறிக்கைகளும் விரைவில் முன்னளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் கிடைத்தவுடன் அவையும் முறைப்படி அமைச்சுக்கு முன்னளிக்கப்படும்.

வெலி ஓயாவுக்கான புதிய பிரதேச சபையைப் பொறுத்த வரை உத்தேசிக்கப்படும் பிரதேசத்தின் ஒரு பகுதி வவுனியா மாவட்டத்துக்குள்ளும் மீதிப் பகுதி முல்லைத்தீவு மாவட்டத்துக்குள்ளும் அடங்குகின்றன. புதிய பிரதேச சபைகளை உருவாக்கும் போது மாவட்ட எல்லைகளை மாற்றுவதற்கு எவருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. மாவட்ட எல்லை மீள் நிர்ணயக் குழுவால் விதந்துரைக்கப்பட்டு நாடாளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்டே மீள்நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

தற்போதைய நிலையில் அது சாத்தியம் இல்லாததனால் தேவை இருந்தபோதும் வெலி ஓயாவுக்கான பிரதேச சபை உருவாக்குதல் விதந்து ரைக்கப்படவில்லை.

வடக்கில் உள்ளூராட்சிச் சபைகளைப் புதிதாக உருவாக்குதற்கும் தரமுயர்த்துவதற்குமான நடவடிக்கைகள் தேக்க நிலை அடையவில்லை என்பதையும் உரிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுக் கொண்டுள்ளன என்பதையும் ஆனால் தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்த பின்பே புதிய மன்றங்கள் உருவாக்கப்பட்டு அதற்கமைவாக நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் என்பதையும் அந்த நிலையை நோக்கி வடக்கு மாகாணத்திலுள்ள அரச அலுவலர்கள் வேண்டிய நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொள்வார்கள்.

*அ.பத்திநாதன்: பிரதம செயலர் வடக்கு மாகாணம்*

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்களை அச்சுறுத்தும் கோத்தாபய அரசு

கோத்தாபய இராணுவ அதிகாரியாக இருந்தவர். அவர் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலராகப் பணியாற்றியவர். இப்போது ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கின்றார். அவரது எண்ணம், செயல் எல்லாம் இராணுவ மயப்பட்டதே. கோத்தாபய நாட்டின் தலைவராவது, சிவில் நிர்வாகம் சீரழிக்கப்பட்டு இராணுவ நிர்வாகம் முகிழும் என்று தேர்தல் காலத்திலேயே கட்டியம் கூறப்பட்டது. அதுதான் இப்போது மெல்ல மெல்ல நடைபெறுகின்றது.

ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டின் போக்கில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. முப்படையினரையும் மக்களின் பொதுப் பாதுகாப்புக்கு நாடு முழுவதும் அனுமதிக்கும் அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டு வருகின்றது. மைத்திரி ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் இந்த அறிவிப்பு ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டு வந்தது. கோத்தாபய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரும் இது தொடர்கின்றது.

தேசிய பாதுகாப்புக்கே முதலிடம் என்ற கோத்தாபயவின் கோசத்தின் பின்னால் இராணுவ, சர்வதிகார ஆட்சியே ஒளிந்திருக்கின்றது. இதனால் பெரும்பான்மை மக்களை விட அதிகம் பாதிக்கப்படப்போவது சிறுபான்மை மக்களே. இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் ஏற்கனவே அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ள நிலையில், கோத்தாபயவின் இராணுவ ஆட்சி அவர்களை மேலும் அடக்கி ஒடுக்கப்போகின்றது.

வடக்கில் வாள்வெட்டுக் குழுக்களை அடக்குகின்றோம் என்ற பெயரில் முப்படையினரும் தேடுதல் நடவடிக்கைக்கு நேற்றுமுதல் களமிறக்கப்பட்டுள்ளனர். வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது உண்மைதான். அவற்றைக் கட்டுப்படுத்துவது பொலிஸாரின் வேலை. அவர்களின் கட்டுப்பாட்டையும் மீறினால் சிறப்பு அதிரடிப் படையினரைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். அதைவிடுத்து முப்படையினரையும் களமிறக்கவேண்டிய தேவை எதுவும் இல்லை.

வாள்வெட்டுக் குழுக்களின் உருவாக்கத்தின் பின்னணியில் ராஜபக்ஷாக்கள் இருக்கின்றார்கள் என்ற சந்தேகம் வடக்கு மக்கள் மத்தியில் உண்டு. கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்னவும் இப்படியொரு கருத்தை வெளியிட்டிருந்தார். வடக்கில் தொடர்ந்தும் இராணுவத்தை நிலைநிறுத்துவதற்காகவே இவ்வாறான வாள்வெட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன என்று தமிழ் அரசியல் தலைவர்களும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

வாள்வெட்டுக் குழுக்களின் கொட்டத்தை அடக்குகின்றோம் என்ற பெயரில் முப்படையினரை வீதி வீதியாக இறக்கி சோதனைகளை ஆரம்பிக்கச் செய்துள்ளனர்.

ஏற்கனவே நாட்டின் சிவில் நிர்வாகம் இராணுவமயமாகிக் கொண்டிருக்கின்றது. முக்கிய பதவிகளுக்கு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அரசியல் பழிவாங்கல் நடந்து கொண்டிருக்கின்றது. ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. சட்டத்துக்குப் புறம்பான தடுத்து வைத்தல், விசாரணைகள் இடம்பெறுகின்றன. மோசமான இராணுவ ஆட்சிக்குள் நாடு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவை ஒருபுறம் நடந்து கொண்டிருக்க சர்வதேச சமூகத்தையும் தூக்கிப் பந்தாடும் செயற்பாடும் நடக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக இலங்கை விலகப் போவதாகக் கூறுகின்றது. சர்வதேச சமூகத்துடன் பகைமையை வளர்க்கத் தொடங்கியிருக்கின்றது.

எல்லாமுமாக நாடு நல்ல திசையை நோக்கி நகரவில்லை. இது சிறுபான்மைச் சமூகங்களுக்கே ஆபத்து.

# டெங்கு தீவிரம்



# நவம்பரில் மட்டும் 480 பேர் கண்டறிவு

## 335 பேருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த நவம்பர்மாத இறுதிவரை 480 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 335 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நகர், நல்லூர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் இருந்தே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாநகர சபை தெரிவித்தது.

இலங்கையை உலுக்கியுள்ள டெங்கு நோய்த் தாக்கம், யாழ்ப்பாணத்தையும் விட்டு வைக்கவில்லை, டெங்குத் தாக்கத்தால் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். உயிரிழப்புக்களும் இடம்பெற்றிருந்தன.

யாழ்ப்பாண மாநகர சபைக் குட்பட்ட பகுதிகளில்கடந்தநவம்பர் மாதம் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இடங்கள் தரிசிப்பு, சுத்திகரிப்பு நடவடிக்கைகள், ஒலிபெருக்கி அறிவித்தல்கள், புகையூட்டல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென பிரிவு சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரப் பாதுகாவலர், மாநகர சபை டெங்குத் தொண்டர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், பரிசோதகர்கள், மலேரியாதடை இயக்க அலுவலர்கள் பொலிஸ் அலுவலர்கள் என 95 அரச பணியாளர்கள் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் முதலாம், 2ஆம், 3ஆம் குறுக்குத் தெருக்களிலும், நல்லூரில் கொண்டலடிப் பிரதேசத்திலும், கொழும்புத்துறையில், புங்கன்குளம் வீதியிலும் டெங்கு நோயாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு ஒழிப்புச் செயற்பாடுளை மேற்கொண்டபோது,சாதாரண செயற்பாட்டின் அடிடையில், 303 பேருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. 7 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறப்புச் செயற்பாட்டில் 335 பேருக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. 27 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டுக்காக தனியான நிதி ஒதுக்கீடுகள் எதுவும் இல்லாத போதும், சுகாதார சேவைகளுக்கான ஒதுக்கீட்டில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்று மாநகர தகவல் அலுவலர் வழங்கிய தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-21)

# தொழிற்றுறை மேம்பாடு தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

வடக்கு மாகாணத்தில் தொழில்துறைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் உருவாக்குவது தொடர்பில் இந்திய துணை தூதுவர் பாலச்சந்திரன் தலைமையிலான குழுவினர் கடல்தொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் அமைச்சரின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது வடக்கில் மக்களின் வாவாதாரங்களை மேம்படுத்துவதற்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான ஏதுநிலைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

# டெங்கு ஏதுநிலை 25 பேர் சிக்கினர்!

## 15 பேர் தண்டம் செலுத்தினர்

வலி.தென்மேற்கு, டிசெ. 23

யாழ்ப்பாண நகரில் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய வகையில் சூழலை வைத்திருந்த 25பேர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் சிக்கினர்.


அவர்களில் 15 பேருக்கு யாழ்ப்பாண நீதிமன்று தலா 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. மன்றுக்குச் சமுகமளிக்காத 10 பேர் மீதான வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதியில் டெங்கு நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகயில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் வீடு வீடாகச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்ஜீவன் கடந்த வாரம் யாழ்ப்பாண நகரில் வர்த்தக நிலையங்கள், வீடுகள், கட்டட அமைப்புப்பணி இடம்பெறும் இடங்களில் நடத்திய சோதனையில் 25 இடங்களில் குடம்பிகள் இருந்தமையை அவதானித்து, சம்மந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்திருந்தார். (த-115)




# ஐ.நா பருவநிலை மாநாடு மேலும் ஓர் ஏமாற்றம்தான்



இந்த நூற்றாண்டைத் தீர்மானிக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினை பருவநிலை மாற்றம்தான். ஆனால், அது தொடர்பாக ஸ்பெயின் தலைநகர் மட்ரிடில் நடந்து முடிந்துள்ள ஐ.நா மாநாடு, பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது.
பருவநிலை மாற்றம் குறித்துப் பல்வேறு நாடுகளுக்கு இடையிலான ஆய்வுகளை மேற்கொண்டு அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை எடுக்காவிட்டால் மிகப் பெரும் கேடுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளது.
பசுமை இல்ல வாயுக்களின் தற்போதைய வெளியேற்றத்துக்கும் அடுத்து வரும் பத்தாண்டுகளில் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அளவுக்கும் இடையே நீண்ட இடைவெளி இருப்பதை ஐநாவின் சுற்றுச்சூழல் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. அறிவியல்பூர்வமான இந்தப் புதிய ஆய்வறிக்கைகள் கிடைத்திருக்கும்பட்சத்திலும், ஏறக்குறைய 200 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருக்கும் இந்த மாநாட்டின் பலன் வருத்தமளிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.
பாரீஸ் உடன்பாட்டின் அங்கத்தினர்களுக்கு இடையே தற்போது ஸ்பெயினில்நடந்துமுடிந்துள்ள மாநாடு, கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த அமைப்புகளையெல்லாம் செயல்படாத நிலைக்கு ஆளாக்கிவிட்டது. பரிஸ் உடன்பாட்டுக்கு முந்தைய கியோடோ உடன்படிக்கையின்படி தூய்மையை மேம்படுத்தும் தொழில்நுட்பத்துக்காகச் செலவிடுவதற்குச் சில நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. குதிரை பேரபாணியிலான இந்த நிலைப்பாடு, பருவநிலை மாற்றத்தால் மிகவும் மோசமான பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறது.

**எச்சரிக்கும் தரவுகள்**

பாதிப்புகளைப்பற்றிய ஆய்வுவிவரங்கள், இவ்விடயத்தில் தீவிர கவனமும் உடனடி நடவடிக்கைகளும் தேவை என்பதை எடுத்துக்காட்டுகின்றன.
ஆனால், வெப்பநிலை அதிகரிப்பை 1.5 டிகிரி செல்சியஸ் என்ற அளவுக்குள் நிலைநிறுத்தும் வகையில் புசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறினாலும் மாநாட்டின் இறுதி அறிக்கை அந்த இலக்கைப் பலவீனப்படுத்தும் வகையிலேயே உள்ளது.
பருவநிலை மாற்றங்கள் மற்றும் அதன் பாதிப்புகளைச் சமாளிக்கவும் ஏழை நாடுகளுக்கு அதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் வளரும் நாடுகள், அடுத்த ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு இந்திய மதிப்பில் ஏறக்குறைய ரூ.7 லட்சம் கோடி மதிப்பிலான தொகையை உருவாக்க வேண்டும் என்று பருவநிலை மாற்றம் தொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திட்ட நாடுகள் வலியுறுத்தியுள்ளன. ஆனால், பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற சர்வதேச குடிமைச் சமூகத்தின் அழுத்தத்தை அந்நாடுகள் தவிர்த்துவிட முடியாது. இந்தியாவின் மொத்த கரியமில வாயு வெளியேற்ற அளவைக் காட்டிலும் அதன் சராசரி தனிநபர் அளவு குறைவாகவே உள்ளது. மற்ற பெரிய நாடுகளைக் காட்டிலும், பரிஸ் உடன்படிக்கையின் கீழான அதன் இலக்கை எளிதில் அடைந்துவிட முடியும்.
எனினும்நிலக்கரி, பெற்றோல் உள்ளிட்ட புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்வது என்பது நீண்டகால நோக்கில் தவிர்க்க முடியாதது. இந்தியா இந்த இலக்கை நோக்கி நடைபோட வேண்டியது அவசியம்.



நன்றி: இந்து தமிழ் திசை

“ வெப்பநிலை அதிகரிப்பை 1.5 டிகிரி செல்சியஸ் என்ற அளவுக்குள் நிலைநிறுத்தும் வகையில் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறினாலும் மாநாட்டின் இறுதி அறிக்கை அந்த இலக்கைப் பலவீனப்படுத்தும் வகையிலேயே உள்ளது. ”

## ஆசிரியருக்கான கடிதம்

### பயணிகள் நிம்மதியாக பயணிக்கும் சூழல் உருவாகுமா?

கனகரத்தினம் வீதி, அரியாலையில் வசிக்கும் பத்மாவதி ஆகிய நான் கொச்சிக்கடையில் வசிக்கும் எனது தம்பியின் வீட்டுக்குச் செல்வதற்கு கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணி 20 நிமிடமளவில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட தனியார் பேருந்தில் ஏறினேன். ஆயிரம் ரூபா கொடுத்தேன். 50 ரூபா மிகுதி தந்தார்கள். பற்றுச்சீட்டு தரவில்லை. காலை 4 மணிக்கு போகவேண்டிய இடத்துக்கு போய்ச் சேர்ந்தேன். பின்பு 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருவதற்காக இரவு 10 மணியளவில் கொச்சிக்கடையில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோது மன்னாருக்கு செல்லும் தனியார் பஸ் வந்து நின்றது. நான் யாழ்ப்பாணம் என்று சொன்னேன்.
நான் யாழ்ப்பாணம் அனுப்புகிறேன் வாருங்கள், வாருங்கள் என்று கரைச்சல் படுத்தினார்கள். கரைச்சல் தாங்க முடியாமல் ஏறினேன். ஆயிரம் ரூபா கொடுத்தேன். 100 ரூபா மிகுதி தந்தார். பற்றுச்சீட்டு தரவில்லை. யாழ்ப்பாணத்துக்கும் காசு எடுத்துவிட்டேன். பயப்பிடாமல் இருங்கள் என்று சொன்னார். பின்வு இரவு 2 மணி இருக்கும் என நினைக்கிறேன். மதவாச்சியில் என்னை இறக்கி - வேறு ஒரு பஸ்ஸில் ஏற்றிவிட்டு ஓடிவிட்டார்கள். நான் பஸ்ஸில் ஏறியதும் காசு கேட்டார்கள். நான் முதல் பஸ்ஸில் நடந்ததைச் சொன்னேன்.
“மன்னார் பஸ்ஸுக்குக் காசு கொடுத்திட்டு யாழ்ப்பாண பஸ்ஸில் என்னெண்டு போற….” என்னை ஏளனமான பார்த்து ஏசினார். என்ன செய்வதென்று தெரியாமல் கூனிக்குறுகி நின்றேன். நான் யாழ்ப்பாணம் போனதும் உங்கள் பணத்தைத் தருவேன் என்று சமாதானம் சொன்னேன். என்னுடைய பணத்தை செலவு செய்தும் மன நிம்மதியுடன் பயணம் செய்ய முடியவில்லை. இந்த நிலை வேறு எவருக்கும் ஏற்படாதவாறு உரிய அதிகாரிகள் செயற்படுவார்களா?

உ.பத்மாவதி



## டெங்கு விழிப்புணர்வு

டெங்கு காய்ச்சலின் ஆபத்தான நிலைகளை ஆரம்பத்திலேயே கண்டறிவதனாது சிகிச்சை அளிப்பதில் மிக முக்கியமாகும்.
காய்ச்சல் ஏற்பட்டு இரண்டு நாள்களின் பின் (3ஆம் நாள்) செய்யப்படும் குருதிப் பரிசோதனை மிகவும் பிரயோசனமானதாகும்.

*சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைப்பு*

# ஐந்து மாதங்களில் 34 மாடுகள் திருட்டு

கொடிகாமம், டிசெ.23
தென்மராட்சிப் பகுதியில் அண்மைக்காலமாக காணிகளில் கட்டப்பட்டிருக்கும் மாடுகள் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டு வருவதாகப் பொது மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலபோக நெற்செய்கையை ஆரம்பித்ததையடுத்து, மேய்ச்சலுக்கு விடாமல் அருகிலுள்ள காணிகளில் கட்டப்படும் மாடுகளே திருடப்பட்டுள்ளன. கடந்த ஐந்து மாதங்களுக்குள் 34 மாடுகள் திருடப்பட்டுள்ளன.



இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை எந்தவொரு மாடும் மீட்கப்படவில்லை. நிறுவனங்களால் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட மாடுகள் மற்றும் விலை கொடுத்து வாங்கிய மாடுகள் திருடப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்படுவதால் பால் உற்பத்தியால் வருமானம் பெறும் குடும்பங்கள் வறுமைக்குள் தள்ளப்படுகின்றனர் என்று கிராம மக்கள் தெரிவித்தனர். (க-159)

## விவசாய அடையாள அட்டைக்கான பதிவுகள்

கைதடி, டிசெ.23
கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள கைதடி கமநல சேவைகள் நிலையத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் விவசாய அடையாள அட்டைக்கான பதிவுகள் இடம்பெறவுள்ளன. இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து அலுவலக நேரங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதடி வடக்கு, கைதடி கிழக்கு, கைதடி தெற்கு, கைதடி மேற்கு, நாவற்குழி மேற்கு, நாவற்குழி கிழக்கு, கோயிலாக்கண்டி, கைதடி , மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி நுணாவில், தென் மட்டுவில், மட்டுவில், நுணாவில், மட்டுவில் மத்தி, சந்திரபுரம் ஆகிய கிராமங்களின் விவசாய சம்மேளனங்களது விவசாயிகள் விவசாய அடையாள அட்டைக்குப் பதிவு செய்ய முடியும் என்று பெரும்போக உத்தியோகத்தர் கு. கோகுலன் அறிவித்துள்ளார். (ஐ-222)

## ஆண்டிறுதி விழா

பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனையின் ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மருத்துவமனை ஊழியர்களின் 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பிள்ளைகள் விசேட பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். ஓய்வு பெற்றுச் சென்ற, இடமாற்றல் பெற்றுச் சென்றவர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். ஊழியர் நலன்புரிச் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெற்றது. மருத்துவ அத்தியட்சகர் மருத்துவக் கலாநிதி த. குகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிறி, சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வரதன் இந்திரவதனா ஆகியோர் கலந்து கொண்டார். (க-159)

## பரிசளிப்பு நிகழ்வும் கலைவிழாவும்

கொடிகாமம், டிசெ.23
கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும், கலைவிழாவும் இன்று திங்கட்கிழமை கைதடி இணுங்கித்தோட்ட அன்னை ரத்தின மணிமண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். இல்லத்தின் வளர்ச்சிக்குழுத் தலைவி திருமதி பொ. ஸ்ரீரஞ்சனாதேவி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் சேவைகள் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் ரி. விஸ்வரூபன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ பிரதாப், கைதடி கிளையின் இலங்கை வங்கி முகாமையாளர் ரி. திருவரங்கன், சாவகச்சேரி இணக்க சபைத் தவிசாளர் இராசரத்தினம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ. பேரின்பநாதன், வடக்கு மாகாண ஓய்வுநிலைக் கணக்காய்வு உத்தியோகத்தர் வே. தயாளன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ. கந்தசாமி உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கைதடி இணுங்கித் தோட்ட தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள் ஆசியுரையை வழங்குவார். (ஐ-159)



## ஆண்டு நிறைவு நிகழ்வு

கொடிகாமம், டிசெ.23
கச்சாய் வினோபா முன்பள்ளியின் ஆண்டு நிறைவு நிகழ்வு முன்பள்ளி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் திருமதி ம. பிரதீபா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ச. அரியநாயகம், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தரும் லயன்ஸ் கழக இணைப்பாளருமான மருத்துவர் இ. கந்தையா உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த முன்பள்ளியில் கல்வி கற்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், அடுத்த வருடம் பாடசாலைக்குச் செல்லவுள்ள மாணவர்கள் மற்றும் புதிதாக முன்பள்ளியில் இணையும் மாணவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-159)

## தொழிலாளர்கள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23
யாழ். மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.



யாழ். நவீன சந்தையில் சுகாதார ஊழியர் இருவர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஊழியர்கள் யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் ஒன்றுகூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

எனினும் அதற்கு உரிய நடவடிக்கைகள் எவராலும் எடுக்கப்படவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். சம்பவத்தை அறிந்த கடற்றொழில் மூலவளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பவ இடத்துக்கு வருகை தந்து, தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார். சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் வரை பணிப்புறக்கணிப்புத் தொடரும் என்று தொழிலாளர்கள் தெரிவித்தனர். (க-111)

## சந்தை திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட செங்குந்தா சந்தைக் கட்டடத்தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. மூன்று வகையான சந்தைத் தொகுதிகளாக அமைக்கப்பட்டு யாழ்ப்பாண மாநகர முதல்வரால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் மாநகர முதல்வருடன் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், மாநகர பிரதி முதல்வர் து. ஈசன், மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-104)



## சுவரோவியங்களை இன்னும் சிறப்பாக்க

# நிதி போதவில்லை


வவுனியா, டிசெ. 23

நகரை அழகுபடுத்தும் நோக்கில் வவுனியாவிலும் சிறப்பான சுவரோவியங்கள் வரையப்பட்டு வருகின்றன. எனினும், பணப் பற்றாக்குறைச் சிக்கல் உள்ளது என்றும், இதை இன்னும் சீராக முன்னெடுக்க நிதி உதவி வழங்கவேண்டும் என்றும் இளைஞர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



சில வாரங்களாக நாடு முழுவதும் இளைஞர்கள் பலர் ஒன்றிணைந்து நகரங்களிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் இருக்கும் சுவர்களை வர்ணமயமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கமைய வவுனியாவிலுள்ள பல இடங்களில் 3டி வடிவமைப்பில் படங்கள் வரையப்பட்டு வருகின்றன.

வவுனியா நகர்ப் பகுதியில் பேருந்து நிலையம், இலுப்பையடி, தினச்சந்தை போன்ற பகுதிகளில் தத்துரூபமான பல வர்ணமயமான கைவண்ணங்களை மேற்கொண்டுள்ள இளைஞர்கள் இவற்றைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு உதவி, ஒத்துழைப்புக்களை வழங்குமாறு வவுனியாவிலுள்ள அமைப்புக்கள், சங்கங்கள், நிறுவனங்கள், திணைக்களங்களைக் கோரியுள்ளனர். (த-110)





நகரை அழகுபடுத்துவோம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நெல்லியடி நகரப் பகுதியை அழகுபடுத்தும் செயற்பாட்டில் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். நெல்லியடி பஸ் நிலையம் மற்றும் நெல்லியடி பழைய சந்தைக் கட்டடத்தொகுதி என்பன வர்ணப்படங்கள் வரைந்து அழகுபடுத்தப்படுகின்றன. (க-108)

## கலையரங்கு திறப்பு

குருநகர், டிசெ.23

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் உள்வளவில் புதிதாக அமைக்கப்பட்ட கலையரங்கு புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண பிதா சாள்ஸ் யஸ்ரின் அடிகளாரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது.

இதற்கான நிதியை குருநகரைச் சேர்ந்த குத்தகையாளர் பற்றிக் துரை வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-51)



கிளிநொச்சியைச் சேர்ந்த சிங்கராசா ஜீவநாயகம் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி மற்றும் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுகளின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரியாக நீதி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (க-159)

## குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அலுவலருக்கு

# இடமாற்றம்

மன்னார், டிசெ. 23

மன்னார் தேட்டவெளிப் பகுதியில் அருட்தந்தை ஒருவரைத் தாக்கி மக்களை அச்சுறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் பொலிஸார் அலுவலர் தற்காலிகமாக வவுனியா பொலிஸ் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் மீதான குற்றச்சாட்டு விசாரணைசெய்யப்பட்ட பின்னரே மேலதிக நடவடிக்கை என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றுபவரே இடமாற்றம் செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் தோட்டவெளிக் கிராமத்தில் உள்ளூர் நிர்வாக அதிகாரிகளின் அனுமதிப் பத்திரங்கள் இன்றி தென்பகுதி அரசியல் வாதிகளின் அனுமதிப்பத்திரங்களை மீன் வளப்புக்கென கையில் வைத்து மண் அகழ்வில் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு அந்தக் கிராம மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

கடந்த புதன் கிழமை காலை மண் அகழ்வுக்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அங்கு நின்றிருந்த பங்குத்தந்தையை குறித்த பொலிஸ் அலுவலர் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

பின்னர் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவ இத்துக்குச் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தார். (த-56)

# குத்தகைக் கார் ஏற்படுத்திய குழப்பம்

வவுனியா, டிசெ. 23

குத்தகைக்கு வழங்கப்பட்ட வாகனத்தை நிதி நிறுவன ஊழியர்கள் மீட்க முற்பட்ட போது குழப்பம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் வவுனியா தர்மலிங்கம் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நெளுக்குளம் பகுதியில் வசிக்கும் கிராம அலுவலர் குத்தகை முறையில் காரைக் கொள்வனவு செய்துள்ளார். அதற்குரிய பணம் சில மாதங்களாகச் செலுத்தியிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அதனை மீட்டுச் செல்வதற்கு அந்த நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற ஊழியர்கள் சென்று காரை ஒப்படைக்குமாறு தெரிவித்தனர். இதனால் குழப்பம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது காரின் தற்காலிக உரிமையாளரான கிராம அலுவலர், "தனது காரை விலைக்கு வாங்கும் நோக்குடன் நேற்று சிலர் வந்து அதனைச் செலுத்திப் பார்க்க கேட்டனர். தான் ஓட்டிப்பார்க்க அனுமதித்த நிலையில் அவர்கள் அதனைச் செலுத்தி வவுனியா நகர் பகுதிவரை சென்றுள்ளனர். தாம் நிதி நிறுவனம் என்று தெரிவித்து காரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தனர். நான் அதற்கு மறுப்புத் தெரிவித்தேன். வாடகைப் பணத்தில் ஒரு தொகையை நேற்றுச் செலுத்தியிருந்தேன். மிகுதிப் பணம் வருகின்ற நாள்களில் செலுத்தவிருந்த நிலையில் அதனை மீட்க வந்துள்ளார்கள்" என்று தெரிவித்தார். நிதி நிறுவன ஊழியர்களும் விடாப்பிடியாக நின்றனர். காரின் தற்காலிக உரிமையாளரான கிராம அலுவலரும் காரைவிட்டு இறங்காமலேயே இருந்தார். இதனால் குழப்பநிலை சற்று நீடித்தது. பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். இரு தரப்பினருடனும் அவர்கள் கலந்துரையாடி காரை அதன் தற்போதைய உரிமையாளரான கிராம அலுவலரை எடுத்துச்செல்லும்படி பணித்தனர். பின்னர் நிலைமை சுமூகமாகியது. (த-110,ரி4)



# சூரிய கிரகணத்தில் மக்களே அவதானம்!

வவுனியா,டிசெ.23

எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவிருக்கும் சூரிய கிரகண நாளில் பொதுமக்கள் அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியச் செயலாளர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் வியாழக்கிழமை சூரிய கிரகணம் இடம்பெறவுள்ளது. இலங்கை நேரப்படி காலை 08.09 மணிமுதல் பகல் 11.22 மணி வரையுள்ள காலப்பகுதிகளில் இது இடம்பெறும். இலங்கையில் சூரிய கிரகணம் தெளிவாகத் தென்படும். அன்றைய தினம் ஆஞ்சநேயர் ஜெயந்தி தினமுமாதலால் காலை பூசைகள் காலை 8.00 மணிக்குள் முடிக்கப்பட வேண்டும். பின்னர் காலை 8.05 மணியளவில் ஆலயங்கள் நடைசாத்தப்பட்டு பகல் 11.30 மணிக்குப் பின்னர். பரிகார வழிபாடுகளின் பின்னர் திறக்கப்படும்.

எனவே அதற்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் ஆலயங்களில் எவ்வித மான வழிபாடுகளும் இடம்பெற மாட்டாது. இந்தக் கிரகண காலப்பகுதிகளில் உணவுகள் சமைப்பது அல்லது உட்கொள்ளுவதை தவிர்த்துக் கொள்ளவும்.

இக்காலத்தே உண்ணும் சமைக்கும் உணவுகள் சூரியனில் இருந்து வரும் செவ்வூதாக் கதிர்களால் நஞ்சாகும் தன்மை உடையன. அதனால் அவற்றை முடிந்தவரை தவிர்க்கவும். அவ்வாறு உணவுகள் இருந்தால் அவற்றைத் தர்ப்பை புல்லினால் மூடி வையுங்கள். அதன் பின்னர் அவற்றைப் பாவிக்கலாம்.

வெற்றுக்கண்ணினால் சூரியனை இக்காலப்பகுதிகளில் பார்ப்பதனைத் தவிர்க்கவும். ஈரத்துணி கொண்டு பார்க்கலாம்.

கர்ப்பிணிகள் இக்காலப்பகுதிகளில் வெளியில் செல்வதையோ அல்லது சூரிய கிரகணத்தைப் பார்ப்பதைத் தவிர்க்கவும் - என்றுள்ளது. (க-110)



## பெண் ஊழியர் மீது தாக்குதல் வர்த்தக நிலையம் முற்றுகை

வவுனியா,டிசெ.23

வவுனியா கடை வீதியில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் இரண்டு பிள்ளைகளின் தாயான தமிழ்ப் பெண்ணை, கடையின் உரிமையாளரின் மகன் என்று தெரிவிக்கப்படுபவர் தாக்கியமையால் அங்கு குழப்ப நிலமை ஏற்பட்டது.

வர்த்தக நிலையத்தில் கடமை புரியும் பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த பெண் ஊழியர் நேற்றுமுன்தினம் பணியின்போது கடையில் இருந்த கண்ணாடிப் பொருள் ஒன்றைத் தவறுதலாக உடைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனால் கோபமடைந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரின் மகன் என்று தெரிவிக்கப்படுபவர், பெண் ஊழியரைக் கீழே தள்ளிவிட்டு சரமாரியாகத் தாக்கினார் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இதனால் அந்தப் பகுதியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் ஒன்று கூடி வர்த்தக நிலையத்தை முற்றுகையிட்டனர். தாக்குதலுக்குள்ளான பெண்ணை வெளியே அனுப்புமாறு தெரிவித்து கடை உரிமையாளருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் ஒரு மணி நேரம் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. போக்குவரத்தும் தடைப்பட்டது.

அந்தப் பகுதியில் கடமையில் நின்ற பொலிஸார் பொதுமக்களைச் சமாதானப்படுத்தியதுடன், தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் தெரிவித்திருந்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த தலைமைப் பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் வர்த்தக நிலைய உரிமையாளரிடம் விவரங்களைக் கேட்டறிந்தனர்.

தாக்கினார் எனத் தெரிவிக்கப்படும் நபரையும், தாக்குதலுக்குள்ளான பெண்ணையும் வாகனத்தில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். வவுனியா நகரில் அமைந்துள்ள அநேகமான முஸ்லிம் வர்த்தக நிலையங்களில் தமிழ்ப் பெண்கள் பணியாற்றிவரும் நிலையில் இந்தச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (க-110)

## நிறைமதி கலைவிழா

வடமராட்சி,டிசெ.23

வடமராட்சி கல்வி வலயத்தின் நிறைமதிக் கலைவிழா கடந்த வெள்ளிக்கிழமை 20ஆம் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணியளவில் சிறப்பாக இடம்பெற்றது.

வடக்கு மாகாண கலாசார திணைக்களத்தின் அனுசரணையில் வலயக்கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து மங்கல இசை முழங்க நிகழ்வு மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து மங்கள விளக்குகளை வணக்கத்திற்குரிய தியாகராஜ சோமஸ்கந்த குருக்கள், வண பிதா ஜாவிஸ் அடிகளார், மௌலவி அஸ்மல் ஏ காதர், நிகழ்வின் பிரதம விருந்தினரான ந. திருலிங்கநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து மேடை நிகழ்வாக மங்கல வாத்திய இசை, இறை வணக்கப்பாடல், தமிழ்த் தாய் வாழ்த்து, தமிழ் மொழி வாழ்த்து, வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து வணக்கத்துக்குரிய தியாகராச சோமஸ்கந்த குருக்கள். வணபிதா ஜாவிஸ் அடிகளார்,மௌலவி அஸ்மல் ஏ காதர் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினர்.

தலைமையுரையை நிகழ்வின் தலைவரும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமான யோ. ரவீந்திரன் நிகழ்த்தினார்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவர்களின் நடனம், ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் நாட்டார்பாடல்,யாழ்ப்பாண புற்றளை மகா வித்தியாலய மாணவர்களின் 'மஞ்சொலி' நடனம் என்பன இடம்பெற்றன.

தொடர்ந்து கலைஞர்கள் மற்றும் பிரதீபா பிரபா விருதுகள் பெற்ற ஆசிரியர்கள் உட்பட பலர் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-160)



## 10 ஆண்டுகளின் பின் சூரிய கிரகணம்

### மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 23

10 ஆண்டுகளின் பின்னர் வானில் தென்படவுள்ள அரிய சூரியக்கிரகணத்தை வெற்றுக் கண்களால் மாத்திரமின்றி, சாதாரண மற்றும் கறுப்பு நிறக் கண்ணாடிகளை பயன்படுத்திப்பார்வையிடுவதும் கூட ஆபத்தானது என்றும் இதுபோன்ற ஆபத்தான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் வானியல்துறை பேராசிரியரான சந்தன ஜயரத்ன, பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார். வடக்குக்கு சூரிய கிரணம் முழுமையாகத் தென்படும். மன்னாருக்கு மேல்திசையில் யாழ்ப்பாணம் வரையான பகுதிகளில் சூரிய கிரகணம் முழுமையாக தென்படக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தென் பகுதியில் இந்த சூரிய கிரகணம் பகுதி அளவிலேயே தென்படும் என்றும் எதிர்வரும் 26ஆம் திகதி காலை வேளையில், சூரிய கிரகணத்தை அவதானிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான சூரிய கிரகணம் காலை 8.10க்கு ஆரம்பமாகி முற்பகல் 11.25 அளவில் நிறைவடையும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ.5)

### மட்டக்களப்பில் பிக்கு மீது

## கொலைவெறித் தாக்குதல்

மட்டக்களப்பு, டிசெ. 23

பிக்கு ஒருவர் மூன்று பேர் கொண்ட குழுவால் தாக்கப்பட்டு வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தாக்கப்பட்டு அசைய முடியாமலிருந்த பிக்குவைப் பொலிஸார் மீட்டு, சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர்.

மட்டக்களப்பு எல்லைக் கிராமமான ஓமடியாமடு கிராமத்தில் உள்ள சுதுகல ஆரன்ய சேனாச்சனிய விகாரையின் பிக்குவான சுபத்தாலங்காரம தேரரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார். சிங்கள இளைஞர்களே அவரைத் தாக்கியுள்ளனர்.

காட்டோரமாக ஒதுக்குப்புறமாக விகாரை அமைந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மாலை பிக்கு, விகாரையில் தமது வழமையான பணிகளை மேற்கொண்டிருந்த போது மதுபோதையில் மூன்று சிங்கள இளைஞர்கள் அங்கு சென்றுள்ளனர்.

காட்டுப்பகுதிக்கு சட்டவிரோத செயற்பாடுகளுக்காக இளைஞர்கள் வருகின்றமையால், எச்சரிக்கையடைந்த பிக்கு, அவர்கள் குறித்து வினவியுள்ளார். மதுபோதையில் தகராறில் ஈடுபட்டபோது, அங்கிருந்து வெளியேறுமாறு கூறியிருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த இளைஞன் ஒருவன், பிக்குவை மிகக் கடுமையாக தாக்கியுள்ளான். கையிலிருந்த கொட்டனால் தாக்கி, கடுமையான காயமேற்படுத்தியுள்ளான். மற்றவர்கள் அங்கிருந்த உடைமைகளையும் அடித்து நொறுக்கியுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்து வீழ்ந்த பிக்கு, நடமாட முடியாத நிலையில், பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பிக்குவை மீட்டு, வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

அயல் கிராமத்தைச் சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்க இளைஞர்களே தன்னைத் தாக்கியுள்ளனர் என்றும், அவர்களை அடையாளம் காட்ட முடியுமென்றும் பிக்கு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

# மிதவாதத் தலைவர்களிடம் சிக்கியுள்ள தமிழர் அரசியல்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவிப்பு

*வவுனியா, டிசெ. 23*

போருக்குப் பின்னரான தமிழர் அரசியல் தலைமைத்துவம் மிதவாத தலைமைகளிடம் விட்டுச்செல்லப்பட்டிருக்கிறது. அதனைத் தவிர மாற்று வழிகள் ஏதுமில்லை. ஆனால் தற்போதைய தமிழர் தரப்பு அரசியல்வாதிகள், புலிகளை வசைபாடுவதும் மறுதரப்பைப் புகழ்பாடுவதுமாகவே உள்ளனர் என்று ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. துளசி வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழினம் இலங்கை சோசலிசக்குடியரசாக மாற்றமடையும் வரை தனித்துவமான இனம், மொழி, கலை, கலாசாரம், மதம், நிர்ணயம் செய்யபட்ட எல்லைகளுடன் தனி அரசுகளாகவே இயங்கி வந்தமைக்கான சான்றுகள் உள்ளன. கல்வி, வேலைவாய்ப்பு, சமூகநிலை என்பனவற்றில் ஓர் இனம் இன்னுமோர் இனத்தை அடக்கும் இழிநிலை ஏற்பட்டது.

இதனாலேயே தமிழர்கள் தமது ஆட்சி உரிமை அதிகாரங்களைப் பெறும்பொருட்டு அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுக்கத் தலைப்பட்டனர். அதற்கு எதிர்வினையாற்றிய இலங்கை அரசு இராணுவ மேலாண்மையைத் தனது குடிகளுக்கெதிராகப் பயன்படுத்தியமையால் மேலும் மோசமடைய வழிகோலியது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சில் ஒருபோதும் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரிவினை வாதத்தை முன்னிறுத்தி பேச்சுக்களில் ஈடுபடவில்லை. யதார்த்தத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பு பிரிவினைவாத அமைப்பே அல்ல. தமிழர்களின் அரசியல் தத்துவார்த்த தளத்துக்குப் பலம் சேர்க்கவே நாங்கள் ஆயுதமேந்திப் போராடினோம்.

தமிழ்த் தலைமைகளே! தேசிய தலைமையால் போரியலையும் சமதளத்தில் அரசியல் செல்நெறிப் போக்கையும் சிறப்புறக் கொண்டு சென்றிட முடியுமானால், ஏன் இப்போது தமிழர் அரசியல் தலைவர்களால் இதைச் செய்ய முடியாதுள்ளது? இனம் தத்துவார்த்த தளமின்றிப் பயணிப்போமேயானால் நாம் எமக்குள் நாமே சிதைவுறுவோம் என்பதில் ஐயமில்லை. புலிகளை வசைபாடுவதும் துதிபாடுவதையும் புலிகள் வேண்டிக் கொண்டதில்லை. அது தேவையுமில்லை. அவர்கள் யாருக்காக வாழ்ந்தார்கள் யாருக்காகத் தம்மை தியாகியாக்கினார்கள். அவர்களைச் சிந்தித்து அவர்களுக்காக ஒன்றுபட்டுச் செயலாற்றுவதே நீங்கள் அந்த மறவர்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி.

போராளிகளே! மிகப்பெரும் போர்க்களங்களில் பங்கெடுத்து வழிநடத்திய இனத்தின் சாதனையாளர் நாங்கள். இடம் சூழ்நிலைகளுக்கு ஏற்ப சுயமாகச் சிந்தித்து முடிவெடுத்து செயலாற்றும் வல்லமையையும் மனோதிடத்தையும் தலைவர் கற்பித்திருக்கிறார். நாங்கள் எடுக்கும் இந்த அரசியல் தளத்துக்கான செயலாற்றுகைக்கான முடிவுகளுக்கு மாவீரர்களும் எமது மக்களும் தோளோடுதோள் கொடுப்பார்கள். அஞ்சி நின்றால் ஆளப்படுவோம். எழுந்து வந்தால் ஆளுவோம்.

ஆயுதப் போராட்டம் போலவே இன்றைய அரசியல் வழியும் எம்மீது நிர்பந்தித்துத் திணிக்கப்பட்டுள்ளது. பொதுவாக கடலிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டவை கேட்காமலேயே திருப்பிக் கொடுக்கப்படுவதே வழமை. அதுதான் இயல்பு. அது நந்திக்கடலுக்கும் பொருந்தும்- என்றுள்ளது. (த-21,26,110)



# 135 பேருக்கு உறுதிப்பூசுதல்

மன்னார்,டிசெ.23

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்கில் 135 பேருக்கு உறுதிபூசுதல் என்னும் திருவருட்சாதனம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் வழங்கப்பட்டது.

பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.கொடுத்தோர் தேவராஜா அடிகளார் தலைமையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி அன்ரனி விக்டர் சோசை அடிகளார், ஆயரின்செயலாளர் அருட்பணி நீக்கிலாஸ் அடிகளார், பேசாலை உதவி பங்குதந்தை அருட்பணி ரஞ்சன் சேவியர் அடிகளார் ஆகியோர் இணைந்துதிருப்பலியை ஒப்புக் கொடுத்தனர். (க-60)





# ஒளி விழாவும் கலை விழாவும்

கொடிகாமம்,டிசெ.23

மிருசுவில் புனித நீக்கிலார் முன்பள்ளியின் கிறிஸ்து பிறப்பு விழாவும், கலை விழாவும் மிருசுவில் றோ க த க பாடசாலை மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றன. நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. விருந்தினர்கள் நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புனித நீக்கிலார் முன்பள்ளியின் முகாமைத்துவக்குழு தலைவி க.வானதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி எக்ஸ்.டபிள்யூ ஜேம்ஸ், சிறப்பு விருந்தினராக மிருசுவில் றோ. க. த. க பாடசாலை அதிபர் க.சத்தியானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-159)

# அருட்சகோதரிகள் மூவர் நித்தியம்

மன்னார்,டிசெ.23

கத்தோலிக்க திருச்சபையில் திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த, திருக்குடும்ப கன்னியர் சபையினரின் மூன்று அருட்சகோதரிகள் தங்கள் இறுதி நித்திய அர்ப்பணத்தை வழங்கினர்.

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி அன்ரனி விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் நடைபெற்ற கூட்டுத் திருப்பலியின் போது நிகழ்வு இடம்பெற்றது.

திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி தியோபின் குரூஸ் முன்னிலையில் அருட்சகோதரிகளான வலைப்பாட்டைச் சார்ந்த அருட்சகோதரி மேரி கிறிஸ்ரின் நிகோலன், பேசாலை சிறுத்தோப்பைச் சேர்ந்த அருட்சகோதரி டிவானா மரியதாஸ், பேசாலையைச் சார்ந்த அருட்சகோதரி லபோரா மேரி சேவியர் குரூஸ் ஆகியோரே தங்கள் இறுதி நித்திய வாக்குத்தத்தத்தை கொடுத்தனர். (க-60)





# பாரதி விழா

கொடிகாமம்,டிசெ.23

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைக்கல்விப் பிரிவின், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாரதி விழாவும், புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வும் மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றன.

நிகழ்வில் "பாரதியாரின் உணர்வுகளில் பெரிதும் மேலோங்கி நிற்பது" தேசியப்பற்றோ, தமிழ்ப் பற்றோ என்ற தலைப்பில் பட்டிமன்றமும், பாரதியாரின் பாடுபொருளில் நெஞ்சு பொறுக்குதில்லை, யாமறிந்த மொழிகளிலே, ஓடிவிளையாடு பாப்பா , தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தந்தையர் நாடெனும் போதினிலே ஆகிய தலைப்புகளில் கவியரங்கமும் இடம் பெற்றன.

பாரதியாரின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. புகுமுக மாணவர்களின் அறிமுகமும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம், ஓய்வு நிலை ஆசிரியர் சாரதபவானி சுந்தரலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக தொலைக்கல்வி பிரிவு தமிழ் இணைய கல்விக்கழக மூத்த விரிவுரையாளரும் இணைப்பாளருமான க.ரஜனிகாந்தன், இணை இணைப்பாளர்துஸ்யந்தகுமாரி ரஜனிகாந்தன், கிளிநொச்சி ஹற்றன் நஷனல் வங்கி நிறைவேற்று அதிகாரி ந.நந்தகோபன், விரிவுரையாளர் க.முருகதாஸ், ஆசிரியர்கள், கல்வி பயிலும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் . (க-159)

# கொழும்புக்கு வராதீர்கள்!!!

## கூட்டமைப்பிடம் கேட்கிறது தமிழ் முற்போக்குக் கூட்டணி



**கொழும்பு, டிசெ. 23**

**நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான வீ.இராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்தார்.**

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பு மாவட்டத்திலும் வேட்பாளரை நிறுத்தவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு நடைபெற்றால் அது மனோகணேசனின் வெற்றியில் எவ்வாறு தாக்கத்தைச் செலுத்தும் என்று எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார். 'ஓர் ஜனநாயக கட்சிக்கு நாட்டில் எந்தப் பகுதியிலும் போட்டியிடும் உரிமை இருக்கின்றது. அதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. கொழும்பில் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கினால்கூட, வெற்றிபெறுவதற்கான ஆற்றல் வாய்ப்புதமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கு இருக்கின்றது. எனினும், தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு, கொழும்பில் போட்டியிடுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்என்பதேஎனது கருத்தாகும் என்று இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார். (ஓ.5,44)



## சகோதர மொழி தெரியாமை வெட்கம்

*கல்வி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 23

21மில்லியன்இலங்கை மக்கள் இரண்டுமொழிகளைப் பயன்படுத்தினாலும், ஒவ்வொருவரும் தனது சகோதர மொழி தொடர்பில் சரிவர அறியாமல் உள்ளதாகவும், இது நாடு என்ற வகையில் நாம் வெட்கப்பட வேண்டிய விடயம் எனவும் கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த 72 வருட அரசியல் முறை இந்த நிலைமையை எம்மிடம் கொண்டு வந்துள்ளதாகவும், நாட்டின் கல்வி முறையின் ஊடாக இந்த நிலைமையை உடனடியாகமாற்றநாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைதெரிவித்திருந்தார். (ஓ.5)



## சீரற்ற காலநிலை 7,000 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 23

சீரற்ற காலநிலையால் 2 ஆயிரத்து 62 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 25 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் ஆயிரத்து 94 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 875 பேர் 37 நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சீரற்ற காலநிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டமையை அடுத்து பல ஆறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. தெதுரு ஓயா, கலா ஓயா, மீ ஓயா மற்றும் கிரிந்தி ஓயா நீர்த் தேக்கங்களினதும் அம்பன் கங்கையினதும் நீர்மட்டம் உயர்வடையக்கூடும் என்று திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர் ஜானகி மீகஸ்தென்ன தெரிவித்துள்ளார்.

மகாவலி கங்கையின் நீரேந்தும் பகுதியில் அதிக மழை வீழ்ச்சி காரணமாக நீர்மட்டம் அதிகரித்துள்ளது. மகாவலி கங்கையின் இரு பகுதிகளிலும் அதன் தாழ்நில பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதேவேளை வெலிமடை, ரேந்தபொல, அம்பேவல தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 12 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அதேபோல ஹப்புத்தளை பிட்டரத்தமலை கீழ் பிரிவில் நெடுங்குடியிறுப்பில் வசித்து வந்த 23 குடும்பங்களைச் சேர்ந்த 95 பேர் மண்சரிவு அபாயம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் பிட்டரத்தமலை கீழ்பிரிவு பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஓ.5)

## கோத்தாவின் கருத்தை வரவேற்கின்றது சீனா

கொழும்பு, டிசெ. 23

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் சீனாவுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை மீளாய்வு செய்யப்படமாட்டாது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கூறியமையை சீனா வரவேற்றுள்ளது. இது தொடர்பாக சீனத்தூதரகம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இலங்கையின் சுயாதிபத்தியத்தையும், ஆள்புல ஒருமைப்பாட்டையும் பெரிதும் மதிப்பதாக சீனா மீண்டுமொரு தடவை வலியுறுத்துகிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பாதுகாப்பும், கட்டுப்பாடும் இலங்கை அரசினதும் அதன் கடற்படையினதும் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். இலங்கையின் வேறு துறைமுகங்களின் பாதுகாப்பும், கட்டுப்பாடும் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளிலிருந்து வேறுபட்டதாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் இருக்கப்போவதில்லை.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு செய்தியாளர்களைக் கடந்த 19ஆம் திகதி சந்தித்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் தற்போது நடைமுறையிலிருக்கும் உடன்படிக்கையை இலங்கை அரசு மீள்பேச்சுக்கு உட்படுத்தப்போவதில்லை என்பதையும், கைச்சாத்திடப்பட்ட வர்த்தக உடன்படிக்கை ஆட்சிமாற்றத்தின் விளைவாக மாற்றியமைக்கப்படப் போவதில்லை என்பதையும் தெளிவாகக் கூறியிருந்தார். ஜனாதிபதியின் கருத்துக்களைப் பெரிதும் மெச்சுகின்ற சீனா உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலைத் துரிதப்படுத்துவதற்கும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் இலங்கைத் தரப்புடன் சேர்ந்து பணியாற்றுமாறு சம்பந்தப்பட்ட சீன நிறுவனங்களுக்கு வழிகாட்டலை வழங்கத் தயாராக இருக்கிறது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஓ.5)

## கோத்தாவின் வெற்றிக்கு காரணம் கூறுகிறார் சஜித்

கொழும்பு, டிசெ. 23

ஜனாதிபதி தேர்தலில் என்னை எதிர்த்துப் போட்டியிட்டவர் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலில் என்னை எதிர்த்து போட்டியிட்டவர் அதிர்ஷ்டசாலியானவர். அவரை யாரும் காலை பிடித்து இழுக்கவில்லை. ஆனால் எனது கால்களை எல்லா இடங்களிலும் பின்னால் இழுத்தனர். சிலர் எதிராளியுடன் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சிலர் கொம்புகளை அணிவிக்க முற்பட்டனர். இந்நிலையில், பொதுமக்களின் ஆசிர்வாதத்திலேயே எனது பயணத்தின் எதிர்காலம் அமைந்துள்ளது.

இதன் காரணமாக சிறந்த கூட்டணி ஒன்றை உருவாக்கி எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளேன்.

பதவிகளுக்காகப் பிளவுபட மற்றும் முறுகல் ஏற்படுத்திக்கொள்ளத் தயாரில்லை.

மக்களின் ஆசிர்வாதத்துடனே அனைத்துச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும். எவ்வாறாயினும், பதவிகளைப் பெறுவதற்காக நாடு முழுவதும் பயணிக்கத் தயாரில்லை-என்றார். (ஓ.5)

## பிள்ளையானை விடுவியுங்கள்!

*அரசிடம் கோருகிறார் கருணா*

கொழும்பு, டிசெ. 23

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானை விடுதலை செய்யுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார் முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆலயடிவேம்பு கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர், பொதுமகன் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"திருகோணமலையில் எங்கள் கட்சியின் கட்டமைப்பு முன்னெடுக்கப்படுகிறது. கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானின் விடுதலைக்கு பல முயற்சிகளை மேற்கொள்பவன் நான். நாம் அனைவரும் ஒன்றாக சேர்ந்து பயணிப்பதுதான் எனது இலக்கு" என்று குறிப்பிட்டார். (ஓ.5)

# இணைய வழியில் கூட்டுறவுத் துறை

## விரைவில் பல மாற்றங்கள் என்கிறார் ஆணையாளர்

**யாழ்ப்பாணம், டிசெ. 23**

**கூட்டுறவுத்துறையில் தற்போதைய காலத்தின் தேவைகருதிப் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். அவற்றின் ஆரம்பமாக கணினிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.**

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினிக் கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத் துறை சார்ந்த பணியாளர்கள் இந்தக் கணினிக் கூடத்தில் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போதைய காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் கூட்டுற வுத் துறையும் கணினி அறிவைப் பெற்றுக் கொள்வது சிறந்தது.

விசேடமாக கணினிப் பயிற்சித் திட்டங்களை உள்வாங்கி அந்தப் பயிற்சிகள் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் இந்தக் கணினி பயிற்சிக்கூடத்தின் ஊடாக கூட்டுறவுத்துறை சார்ந்த அங்கத்தவர்களையும் மற்றும் அவர்களின் பிள்ளைகளையும் இணைத்து பயிற்சிகள் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

சுவீடன் நாட்டு கூட்டுறவு நிலைய நிதியில் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கணினிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. (க-17)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, நுவரேலியா மாவட்ட இளைஞர்களிடையே, போசாக்கு பற்றிய பயிற்சி பட்டறை திரு கோணமலை சர்வோதயா வளாகத்தில் 3 நாள்கள் நடத்தப்பட்டன. அதில் பங்குபற்றிய 72 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (க)



## 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி

வவுனியா,டிசெ.23

வவுனியா பூவரசன்குளம் சோபாலபுளியங்குளத்தைச் சேர்ந்த 20 பெண் தலைமைக் குடும்பங்களுக்கு, உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

தாயக உறவுகளின் டெண்மார்க் பிரண்டோ அபிராமி அம்மா சமூக நல அமைப்பின் தலைவர் மாதவனின் ஏற்பாட்டில், தமிழ் விருட்சம் அமைப்பின் ஊடாகப் பொருள்கள் வழங்கப்பட்டன. (க)

## பரிசளிப்பு விழா

கொடிகாமம், டிசெ.23

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஆ.சின்னத்தம்பி ஆசிரியர் திருவரங்கத்தில் நடைபெறும்.

அதிபர் த.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய லொத்தர்சபை பிராந்திய முகாமையாளர் வை.துவாரகன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை மேற்பார்வையாளர் இ.கந்தசாமி, பரிசில் வழங்குனராக மகாராஜா பொதிகள் சேவை உதவிக் கணக்காளர் கனிந்தினி துவாரகன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)





## கலைஞர்களுக்கு மதிப்பளிப்பு

சாவகச்சேரி,டிசெ.23

மிருசுவில் உசன் சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு, கிராமத்தில் உள்ள கலைஞர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

உசன் சரவணமுத்து அரங்கில், ஓய்வுநிலை அதிபர் பொ.கனகரத்தினம் தலைமையில் நேற்று முன்தினம் நிகழ்வு நடைபெற்றது.

உசன் கிராமத்தைச் சேர்ந்த ஓய்வுநிலைப் பிரதி அதிபர் கனகரத்தினம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ. ஜென்சன் றொனால்ட், கண்ணன், திருமதி ஜெயரஞ்சினி ஆகிய கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

"ஒவ்வொரு பொது அமைப்புகளும் தமது கிராமத்தில் இலைமறைகாயாக உள்ள கலைத்துறைக்கு நீண்டகாலமாக சேவையாற்றிவரும் கலைஞர்களை ஊக்குவிக்கும் செயற்பாடாக மதிப்பளித்தால் அருகிவரும் கலைகள் புத்துயிர் பெறும்" என்று பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செல்வராணி ஜெகதீஸன் தெரிவித்தார். (க-9)

## ஒளி விழா

குருநகர் டிசெ.23

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் ஒளி விழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் கலையரங்கில் நடைபெறும்என்றுபங்குத்தந்தைவண பிதா சாள்ஸ் யஸ்ரின் அடிகளார்தெரிவித்துள்ளார். (க-51)

# விரைவில் குடியமர்வு

## ஜனாதிபதி கூறியுள்ளார் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

இடம்பெயர்ந்து முகாம்களிலுள்ள மக்களை விரைவாக அவர்களுடைய சொந்த நிலங்களில் குடியமர்த்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் அதற்கமைய அவர்கள் விரைவில் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என்றும் சமுதாய வலுவூட்டல்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்ட அவர்மைச்சர் வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்டார். அதன் பின்னர் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

இடம்பெயர்ந்துள்ள மக்களை எவ்வளவு தூரம் விரைவாக மீளக் குடியமர்த்த முடியுமோ அந்தளவுக்கு விரைவில் குடியமர்த்துமாறு ஜனாதிபதி என்னிடம் தெரிவித்திருக்கின்றார். அதற்கமைய நிலைமைகளை ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்திருந்தேன்.

இதன்போது முகாம்களிலுள்ள மக்களுடனும் அரச அதிகாரிகளுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளேன்.

இங்குள்ள மக்களில் சொந்தக் காணிகள் இருந்தும் அவர்களின் காணிகள் விடுவிக்கப்படாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களைக் குடியேற்றுவ தற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அதேநேரத்தில் இன்னும் சிலர் காணிகள் இல்லாமலும் இருக்கின்றனர். ஆகவே காணியில்லாதவர்களுக்கு காணி வழங்கும் அரசின் திட்டத்துக்கு அமைய காணிகளை வழங்கி இவர்களையும் குடியேற்றுவோம்.

இந்தப் பயணத்தின்போது இங்குள்ள மக்களின் மனநிலைகளை அறிந்து கொண்டுள்ளோம். அவர்கள் தம்மைத் தமது சொந்த நிலங்களில் மீளக் குடியேற்றுமாறு எம்மிடம் கோரியுள்ளனர். அதற்கமைய அவர்களை விரைவில் குடியேற்றுவோம்.

ஏனெனில் முகாம்க ளிலுள்ள மக்களை அவர்களுடைய சொந்த நிலத்தில் விரைவாகக் குடியேற்றுமாறு ஜனாதிபதி கூறியிருப்பதன் பிரகாரம் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்- என்றார். (து-ரி1,21,26)



மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக மாவட்டத்திலுள்ள பிரதான நீர்ப்பாசனக் குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. அதனால் உன்னிச்சை, உறுகாமம் ஆகிய குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. (க-46)

## உர வழங்கலில் முறைகேடுகள் விசாரணை ஆரம்பம்

உர வழங்கலில் இடம்பெற்றன என்று கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்காகக் காணக்காய்வுப் பிரிவின் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று விவசாய இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் உர வழங்கலில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றன என்று கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மேல் மாகாணத்தை மிரட்டும் தொழுநோய்

கொழும்பு, டிசெ.23

வருடாந்தம் 8 ஆயிரம் பேர் தொழு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி அடையாளம் காணப்படுகின்றனர். மேல் மாகாணத்திலேயே அதிகம் பேர் தொழு நோய்க்கு உள்ளாகின்றனர் என்று தொழுநோய் தடுப்புப் பிரிவின் குழு ஆலோசகர் சிறப்பு வைத்திய நிபுணர் மிஷாயா காதர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:

மேல் மாகாணத்தில் தொழு நோய் பாதிப்புக்கு உள்ளாபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வயது முதிந்தவர்கள் மத்தியில் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் அதிகம் பேர் இனங்காணப்பட்டுள்ளனர். வருடாந்தம் சுமார் 500 பேர் வரையில் இந்த நோயால் உயிரிழக்கின்றனர்.

2018ஆம் ஆண்டில் மட்டும் 8 ஆயிரத்து 800 தொழு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொழுநோய் நுரையீரல் மற்றும் ஏனைய அங்கங்களில் ஏற்படும். நுரை யீரலில் ஏற்படும் இந்த நோயின் தாக்கம் மிக ஆபத்தானது.

எமது நாட்டில் நுரையீரலில் ஏற்படும் தாக்கமே அதிகம் பதிவாகியுள்ளது.

வருடாந்தம் பதிவாகும் 8 ஆயிரம் தொழுநோயாளர்களில் 40 வீதமானவர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகின்றனர்.

சுமார் 25 வீதமான நோயாளிகள் கொழும்பு மாவட்டத்தின் மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்றனர். - என்றார்., (எ)

# ஒன்றோடு ஒன்று மோதி 7 வாகனங்கள் விபத்து!

கொழும்பு, டிசெ.23

கலேவெல தம்புள்ளை பிரதான வீதியின் யடிகல் பொத்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை 7 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. அதில் 15 பேர் காயமடைந்து தம்புள்ளை மற்றும் கலேவெல வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கலேவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிக மழையுடனான அதிகாலையில் கார் ஒன்றும் லொறி ஒன்றும் மோதி, வீதியை விட்டு விலகிய நிலையில் அது தொடர்பில் பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தபோது மேலும் 5 வாகனங்கள் அந்த இடத்தில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்துக்களில் காயமடைந்த 15 பேர் கலேவெல மற்றும் தம்புள்ளை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், அதில் நான்கு பேரின் நிலைமை கவலைக்கிடமாக காணப்படுகின்றது என்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்குள்ளான அனைத்து வாகனங்களும் பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், விபத்து தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மனக்கணிதப் போட்டியில் ஹரினியா முதலிடம்

கொடிகாமம், டிசெ.23

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவி சசிதரன் ஹரினியா, கம்போடியாவில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான 2019 ஆம் ஆண்டுக்கான 24 ஆவது யுசிமாஸ் மனக்கணிதப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று, வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டார்.



சர்வதேச ரீதியிலான 78 நாடுகள் அங்கம் வகிக்கும் மனக்கணிதப் போட்டியில் தரம் 3 இல் கல்வி கற்கும் மாணவி ச.ஹரினியா குறிப்பிட்ட 8 நிமிட நேரத்தில் இருநூறு கணக்குகளைப் பூரணப்படுத்தி கம்போடியாவில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டார். (க-159)

# வீடுகளைக் கட்டிமுடிக்க உடன் நிதி ஒதுக்குங்கள்

*செல்வம் எம்.பி. பிரதமருக்குக் கடிதம்*

மன்னார், டிசெ. 23



அரைகுறை கட்டுமானங்களுடன் உள்ள வீடுகளை முழுமைப்படுத்த அவற்றுக்குரிய நிதியை விடுவிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த கடிதத்தை அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

வீடமைப்பு அதிகார சபை ஊடாக நாடு முழுவதும் மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளை மக்கள் தமது பங்களிப்புடன் கட்ட ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர்.


அவற்றுக்குரிய நிதி வழங்கப்படும் என்று அரசு உத்தரவாதம் வழங்கியிருந்தது. அதனை நம்பி எமது மக்கள் தமது சொத்துக்கள், நகைகளை அடகு வைத்தும், கடன் வாங்கியும் வீடுகள் கட்டத்தொடங்கியிருந்தனர்.

ஆனால் அவற்றுக்குரிய நிதி இதுவரை வழங்கப்பட்வில்லை. இதனால் மக்கள் நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

அநேகமான வீடுகள் நிதிப்பற்றாக்குறையால் கட்டட வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையிலுள்ளன.

அண்மைய மழை வெள்ளம் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர். வாழ்விடம் இன்றி அல்லலுறுகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இது நாடுமுழுவதுமுள்ள பிரச்சினை.

எனவே வீடமைப்பு அமைச்சராக உள்ள தாங்கள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான நிதியை வழங்கி அரைகுறை கட்டுமானங்களுடன் உள்ள வீடுகளைக் கட்டிமுடிக்க உதவவேண்டும். கட்டுமானங்கள் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-56)





16 ஆயிரம் சிப்பாய்களுடன்

# அமெரிக்காவில் விண்வெளிப்படை

வொஷிங்டன், டிசெ. 23

16 ஆயிரம் சிப்பாய்களுடன் அமெரிக்காவில் விண்வெளிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதல் ஆண்டுச் செலவீனத்துக்காக இலங்கை மதிப்பில் சுமார் 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் ட்ரம்ப் தெரிவித்ததாவது: "விண்வெளிப் படை உலகிலேயே மிகவும் புதிய படையாகும். எமது தேச படைகளுக்கு கடுமையான அச்சுறுத்தல்கள் இருக்கின்றநிலையில், விண்வெளியில் அமெரிக்காவின் உயர்ந்தநிலை மிகவும் முக்கியமானது. இந்தப் படையை நாம் தான் வழிநடத்துகிறோம். ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் எங்களுக்கு இந்தப் படை உதவும்" என்று ட்ரம்ப் தெரிவித்தார். (ம)

## வீடு வாடகைக்கு

இல.52/24 இராசாவின் தோட்ட வீதியில் அமைந்துள்ள மேல்மாடி வீட்டின் இரண்டு மேல் பகுதிகள் வாடகைக்குண்டு. அரச தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. (CS/30075)(11,17)

077 922 7887

## சிவபூசா துறந்தரர்

### வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்



உருவாய் 17 . 02 . 1920

அருவாய் 01 . 01 . 2011

திதி: மார்கழி அபரபக்கத்துத் துவாதசி (23.12.2019) திங்கட்கிழமை

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

"தக்கார் தக்வுஇலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும்"

சிவமாய தந்தைக்கு எம்சிந்தை நிறைந்த வணக்கங்கள்

117, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (CS/30131)(13,17)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



மலர்வு 22 . 10 . 1933

உதிர்வு 19 . 12 . 2019

### மேரித்திரேசா நிக்கிளஸ் (டேவிற் ரீச்சர்)

(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 881, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரித்திரேசா நிக்கிளஸ் 19.12.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டேவிட் - மரியம்மா கிறேஸ் தம்பதிகளின் சிரேஸ்ட மகளும், J.P.நிக்கிளசின் பாசமிகு மனைவியும், மெல்வின் நிலோஷனின் அன்புத் தாயாரும், சுவேனி நிலோஷனின் அன்பு மாமியாரும், கெல்வின், கஸ்பர் ஆகியோரின் அப்பம்மாவும், காலஞ்சென்ற பொன்றோஸ் மற்றும் சென்யோன், சின்ராசா, சுவேந்திரா, பொபிஸ், ஜெனி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற மத்தியூஸ் மற்றும் கொண்சி, லூர்து, இந்துராணி, எமில், ராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (23.12.2019) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்.தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(CS/30082)(11,17)

021 222 4436

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கிருஷ்ணன் ரவீந்திரன்

| பிறப்பு | இறப்பு | திதி:- |
| --- | --- | --- |
| 10.12.1971 | 02.01.2019 | 23.12.2019 |

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்

காலங்கள் கடந்தாலும்
ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில் என்றும்
நிலைத்திருப்பாய்
அன்பின் அடையாளமாக
அறத்தின் புதல்வனாக
தர்மத்தின் தலைவனாக
அன்பில் சிவமாக என்றும் எங்களில்
வாழ்கிறாய்...!

நவக்கிரி, புத்தூர்.

குடும்பத்தினர்.

HOTLINE 0777 17 35 17



IT மற்றும் ஆங்கிலம் இரட்டை டிப்ளோமா

TVEC APPROVED CENTRE

புதிய பிரிவுகள் ஆரம்பம்
23-12-2019 - (Mon)
28-12-2019 - (Sat)
2 - 1 - 2020 - (Thu)
9 am or 3pm

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

IT Courses
- Dip.in Information Teachnology
- Office Automation
- PC Application
- Microsoft Office
- Web Designing
- Hardware,Mulitmedia,
- Auto CAD,Java,C++,PHP

DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056

NVQ COURSES
ICT -Full Time (Level 4)
CAA -Full/Part Time
புதிய பிரிவுகள் 2/1/2020 ஆரம்பம்

● இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
● NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகள்
IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12)

IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
• DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| M.M.V. வீதி, நெல்லியடி | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) சாவகச்சேரி | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) சுன்னாகம் | சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி |
| --- | --- | --- | --- | --- |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

# மணல் அகழ வந்தவர்கள் மக்களைக் கண்டு ஓட்டம்



மருதங்கேணி, டிசெ. 23

மணல் அகழ்வதற்குச் சென்றன என்று கூறப்படும் டிப்பர் வாகனங்களைக் கண்ட மக்கள் அங்கு ஒன்றுதிரண்டு சென்றனர். அவர்களைக் கண்ட டிப்பர்காரார்கள் அங்கிருந்து தப்பிச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாக குடத்தனை வடக்குப் பகுதியில் திருட்டு மணல் அகழ்வு மிக மோசமாக இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் பகலும் மணல் அகழ்வில் ஈடுபட டிப்பர் வாகனங்கள் வருவதை அவதானித்த குடத்தனை வடக்கு மக்கள் ஒன்று திரண்டு சென்றபோது அங்கிருந்து டிப்பர் வாகனங்களில் வந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சட்டவிரோத மணல் அகழ்வு குறித்து பொலிஸார் மற்றும் பிரதேச செயலகத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் இது தொடர்கின்றது என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். ஏற்கனவே தாழ்நிலப் பகுதியாகக் கணப்படும் பகுதியிலேயே சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-160)

# மணல் அகழ்வது மந்துவிலில் தாராளம்

## தடுக்குமாறு கோரிக்கை

கொடிகாமம், டிசெ. 23

தென்மராட்சி மந்துவில் குடியிருப்புப் பகுதியில் இதுவரை காலமும் இல்லாதவாறு வகை தொகையின்றி மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வகைதொகையின்றி இது நீடிப்பதால், மழை காலங்களில் குடியிருப்புப் பகுதிக்குள் வெள்ளம் தேங்கி வீடுகளுக்குள் புகும் அபாயம் ஏற்படலாம் என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

தென்மராட்சி கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளில் உழவு இயந்திரங்கள், டிப்பர் வாகனங்கள். ஹன்டர் வாகனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வகை தொகையின்றி மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என்றும் மக்கள் கூறுகின்றனர். இந்த அரசு ஆட்சிப்பீடம் ஏறி மணல் வீதியில் கொண்டுசெல்ல அனுமதி தேவையில்லை என்ற நடைமுறைக் கொண்டுவந்த நிலையில், வகை தொகையின்றி மணல் அகழப்படுகின்றது.

தென்மராட்சி கிழக்கு வடக்கு பகுதிகளில் மந்துவில், பாலாவி, கெற்பேலி ஆகிய இடங்களில் ஏனைய இடங்களைவிட பெருமளவில் நாளாந்தம் சுமார் நூறு லோட் வரையில் மணல் அகழ்ந்து கொண்டுசெல்லப்படுகின்றது. இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-159)

# அருட்பிரகாசத்தின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,டிசெ.23

ஈரோஸ் அமைப்பின் நிறுவுநர்களில் ஒருவரான அருட்பிரகாசத்தின் நினைவேந்தல் நிகழ்வு நல்லூரிலுள்ள யூரோவில் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொறியியலாளர்களான மார்க்கண்டு ராமதாஸ், எம். தில்லைநாதன், அரசியல் சமூகச் செயற்பாட்டாளர் சி.கருணாகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர், தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் தி.சிறீதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடத் துறைத் தலைவர் இரா.சிவச்சந்திரன், அருட்பிரகாசத்தின் மகள் கல்யாணி சகோதரன் இராஜநாயகம் ஆகியோர் அருளர் தொடர்பான நினைவுரைகளை ஆற்றினர். யாழ். முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது. (க)

# பொலிஸாரின் செயலுக்கு குருமட அமைப்பு கண்டனம்

மன்னார் தோட்டவெளிப் பங்குத்தந்தையிடம் பொலிஸ் அதிகாரி நடந்துகொண்ட விதம் குறித்து வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம் என்று மன்னார் மடு மாதா சிறிய குருமட பழைய மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

தோட்ட வெளியில் கடந்த 18ஆம் திகதி முறையற்ற விதத்தில் மண் அகழ்வு இடம்பெற்றது. இதனைத் தடுத்து நிறுத்த முயற்சித்த மக்களைப் பொலிஸார்தாக்கமுற்பட்டனர். இதனைக் கேள்விப்பட்ட தோட்டவெளி பங்குத்தந்தை அருட்பணி. அலக்சாண்டர் சில்வா (பெனோ) நிலமையைச் சுமுகமாக்க அந்த இடத்துக்குச் சென்றுள்ளார்.

ஆனால் பொலிஸ் அதிகாரி அங்கு சென்ற பங்குத்தந்தையைப் பிடித்துத் தள்ளிவிட்டதோடு தீய வார்த்தைகளாலும் பேசி, அவரைஅவமானப்படுத்தியுள்ளார்.

மணல் அகழ்வானது சட்டவிரோதமானதா இல்லையா என்பதை ஆய்வு செய்து மேலதிக முறைப்படியான நடவடிக்கைக்கு இவர் வழிகாட்டியிருக்க வேண்டும். மன்னார் பிரதேச சபையும் மணல் அகழ்வதற்குத் தடை விதித்திருப்பதால் உரிய காவல்துறை அதிகாரி ஒழுக்கமாக நடந்து தனது மேலதிகாரிகள் மூலமாகத் தீர்வைக் கண்டிருக்க வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாமல் இருப்பதை சம்மந்தப்பட்டவர்கள் உறுதி செய்ய வேண்டும். என்று கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-56,60,213)

# மோ.சைக்கிள் டிப்பர் விபத்து இருவர் காயம்

கொடிகாமம், டிசெ. 23

மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகனத்துடன் மோதியதில் படுகாயமடைந்த இருவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து ஏ9 வீதியில் மீசாலைக்கும் மடத்தடிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றது. மந்துவில் மேற்கு கொடிகாமத்தைச் சேர்ந்தவர்களே படுகாயமடைந்தனர். இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (த-159)

# கண் சிகிச்சை பிரிவு மாற்றம்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு குறிக்கப்பட்ட தினங்களில் செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ணபிரதி முதலாம், மூன்றாம் புதன்கிழமைகளில் நடைபெற்று வந்த கண் சிகிச்சைப் பிரிவு, ஜனவரி மாதம் தொடக்கம் பிரதி இரண்டாம், நான்காம் புதன்கிழமைகளில் நடைபெறும் என்று மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் டயாழினி மகேந்திரன் அறிவித்துள்ளார். சாவகச்சேரி மருத்துவமனையில் நடைபெறும் கண் சிகிச்சை பிரிவில் தென்மராட்சி பச்சிலைப்பள்ளி, பூநகரி, வடமராட்சி கிழக்கு பிரதேச மக்கள் பயனடைந்து வருகின்றனர். (சு-9)

# விபத்தில் தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

## இளைஞன் உயிரிழப்பு

மட்டக்களப்பு,டிசெ.23

விபத்தில் இழுத்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றியது. அதில் பயணித்த இளைஞன் உயிரிழந்தார்.

இந்த விபத்து மட்டக்களப்பு காத்தான்குடிப்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கிராங்குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கல்முனைப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சைக்கிளுடன், அதே திசையில் மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் மோதி, மோட்டார் சைக்கிளை பஸ் கொழுவிக்கொண்டு இழுத்துச் சென்றது.

மோட்டார் சைக்கிளை பஸ் இழுத்துச் சென்றுகொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் தீப்பற்றியுள்ளது. அதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த இளைஞன் கடுக்காமுனைக் கிராமத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். (சு-46)



# எந்த சின்னம் என்பதை யாப்பே முடிவெடுக்கும்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

சிறிலங்காசுதந்திர பொதுஜனகூட்டமைப்பின்யாப்பில்குறிப்பிட்டுள்ளதற்கு அமைய பொதுத் தேர்தல் சின்னம் தொடர்பாகத் தற்போது எழுந்துள்ள மாறுப்பட்ட கருத்துக்களுக்கு தீர்வு முன்வைக்கப்படும்.இவ்வாறு வடமத்திய மாகாண ஆளுநர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கூட்டமைப்பில் லங்கா சமசமாஜ கட்சியும் அங்கம் வகிப்பதால் கட்சி அடிப்படையில் கருத்து தெரிவிப்பது அவசியமாகும். பொதுத் தேர்தலில் சிறி லங்கா சுதந்திர பொது ஜன கூட்டமைப்பு கதிரை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று சிறி லங்கா சுதந்திர கட்சியும், மொட்டு சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்களும்ஞ்ேதுகோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

கூட்டணியில் பல கட்சிகள் அங்கம் வகிப்பதால் பொதுத் தேர்தலில் சின்னம் தொடர்பான ஒருமித்த தீர்மானத்தை மேற்கொள்ளலாம் என்று செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பி டப்பட்டுள்ளது. என்றார். (எ)

# சரியான பட்ஜெட் வந்தால் ஆதரவு!

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

தேர்தல் காலத்தின்போது, வழங்கிய வாக்குறுதிக்கமைவாக வரவு செலவுத் திட்டத்தை அரசு கொண்டுவருமாக இருந்தால், அதற்கு பூரணமான ஆதரவை வழங்கத் தயாராக உள்ளோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். கிரில்லவல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வெற்றி பெற்றத் தரப்பினர் உடனடியாக வரவு செலவு திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம். நாடாளுமன்றில் நாம் பெரும்பான்மையாக இருப்பதால், நாம் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்போம் என்று சிலர் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் ஒருபோதும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டோம்.

மக்களின் நலனுக்காக, நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைவிட அதிக ஆதரவை அரசுக்கு வழங்கவும் தயாராகவே இருக்கிறோம். வரவு செலவுத் திட்டத்தில் உள்ள சலுகைகள், தேர்தல் காலத்தின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியாக அமைய வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.நாம் தெளிவாக இருக்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் எந்தவொரு முரண்பாடுகளும் கிடையாது. என்றார். (எ)

# ரணில் – கரு அவசர சந்திப்பு!

கொழும்பு, டிசெ.23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சபாநாயகர் கருஜயசூரியவுக்குமிடையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை முக்கியத்து வமிக்க சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. சபாநாயகரின் அதிகாரப்பூர்வ வதிவிடத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. வெளிநாடு சென்றிருந்த சபாநாயகர் நாடு திரும்பிய கையோடும் விடுமுறை நிமித்தம் ரணில் வெளிநாடு பயணமாகவுள்ள நிலையிலும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பும் வரையில் - ஐ.தே.க. தொடர்பில் கரு ஜயசூரியவின் ஆலோசனையின் பிரகாரம் கட்சி செயலாளரே தீர்மானங்களை எடுப்பார் என்றும், சபாநாயகர் பதவியை வகிப்பதால் கருஜயசூரியவால் நேரடியாகக் கட்சி செயற்பாடுகளில் தலையிட முடியாது என்பதாலேயே செயலாளர் ஊடாக காய்நகர்த்தல்கள் இடம்பெறவுள்ளன எனவும் அறியமுடிகின்றது. (எ-44)

# சர்வதேச சக்திகளுக்கு அடிபணிய மாட்டோம்

## அமைச்சர் நிமால் கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.23

சர்வதேச சக்திகளின் அழுத்தங்களுக்கு நாம் அடிபணியப் போவதில்லை. ஜெனிவாத் தீர்மானத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஐக்கிய தேசிய கட்சி அரசு சர்வதேச சக்திகளுக்கு அடிபணிந்தே ஆட்சி செய்தது. சர்வதேச கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டு சர்வதேச சக்திகளுக்கு முன்னாள் மண்டியிட்டு நாட்டைத் தவறான திசையில் கொண்டு சென்றது.

ஆனால் நாம் இப்போது உருவாக்கியுள்ள அரசு ஒருபோதும் சர்வதேச அமைப்புகளுக்கோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களுக்கோ புலம்பெயர் அமைப்புகளுக்கோ அடிபணிந்து செயற்பட மாட்டாது.

எமது கொள்கை தேசியத்தை கட்டியெழுப்பும் கொள்கையாகும். ஜனாதிபதியும், பிரதமரும் தெளிவான சிந்தனையில் உறுதியாக தேசிய வாதக் கொள்கையில் இருந்தே செயற்பட்டு வருகின்றனர். அவ்வாறு இருக்கையில் நாம் சர்வதேச சக்திகளுக்கு அடிபணிய மாட்டோம். என்றார். (எ)

# கோத்தாபய அரசிடம் தூர நோக்கு இல்லை

## வேலுகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ.23

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசிடம்தூரநோக்குச்சிந்தனைகிடையாது. சந்தர்ப்பவாதஅரசியலை முன்னெடுப்பதே அதன் கொள்கையாக மாறியுள்ளது. இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதிதி தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்துள்ளார். கண்டி மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலருடன் நேற்று ஞாயிற்றுக்கிழமைஅவர்மேற்கொண்ட சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நாட்டில் தேனும், பாலும் பாய்ந்தோடும் என்ற தொனியில் ராஜபக்ஷக்களும், அவர்களின் சகாக்களும்வீராப்புப்பேசினர். ஆட்சியைக்கைப்பற்றிய பின்னர் பச்சோந்திகள் போன்று கொள்கைகளை மாற்றிக் கொண்டுள்ளனர்.

முக்கியமாகமிலேனியம் சவால்உடன்படிக்கைநிராகரிக்கப்படாது என்று கூறியதுடன், அது நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியது என்றும்விளக்கமளிக்கின்றனர். அப்போது கசப்பு மாத்திரையாகத் தெரிந்தது, இப்போது கரும்பு போன்று இனிப்பது எப்படி? ஜனாதிபதியின் எண்ணத்தில்உதித்தநாட்டைத் தூய்மைப்படுத்தும் திட்டத்தின்கீழ்பொதுஇடங்களில் உள்ளசுவர்களில்ஓவியங்கள் வரையப்படுகின்றன. இளைஞர்களின் உத்வேகத்தைப் பாராட்டுகின்றோம்.

பொதுவெளியில்ஓவியம் வரையும்போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்.ஆனால் யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் வரையலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. ஒரு இனத்தை அவமதிக்கும் விதத்திலும், ஆக்கிரமிக்கும் வகையிலும் கூட ஓவியங்கள் வரையப்படுகின்றன. மனங்களைப்புண்படுத்தும் வகையிலும், பழைய கசப்பான சம்பவங்களை மீள் நினைவூட்டும்வகையிலும் சிலசித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. சுவரோவியத்திட்டத்தைக் கூட முறையாக முன்னெடுக்கத்தெரியாத ஆட்சியாளர், நாட்டினதும்,மக்களினதும்எதிர்காலத்தைஎவ்வாறு வண்ணமயமாக்குவார்கள். என்றார். (எ)

# இந்தியா –அமெ. பேச்சில் இலங்கை பற்றியும் பேச்சு

கொழும்பு, டிசெ.23

அமெரிக்காவின் வொசிங்டனில் கடந்த வாரம் நடைபெற்ற அமெரிக்க - இந்திய உயர் அதிகாரிகளுக்கு இடையே நடைபெற்ற முக்கிய பேச்சின்போது இலங்கை விவகாரம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ மற்றும் அமெரிக்க பாதுகாப்புச் செயலர் மார்க் எஸ்பர் ஆகியோர், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருடன் வொசிங்டனில் அமைச்சர்கள் மட்ட பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் பின்னர் கடந்த 18ஆம் திகதி, கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், சந்திப்பின் போது, தாங்கள் இலங்கை, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நேபாளம், மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்திய நிலைமைகள் தொடர்பான மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொண்டோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை தொடர்பாக விவாதிக்கப்பட்ட விடயம் என்னவென்று அவர் குறிப்பிட்டுக் கூறவில்லை. எனினும் இலங்கையில் சீனாவின் தலையீடுகள் குறித்து கவலை எழுப்பப்பட்டது என நம்பப்படுகிறது என்று இராஜதந்திர வட்டாரங்கள் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ளன.

அதேவேளை, இலங்கை உள்ளிட்ட தெற்காசியாவில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீடுகள் தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து கவலை வெளியிட்டு வருகின்றன. (எ)

# 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம்இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்குழுவால், மட்டகளப்பு மாவட்டத்தில் எல்லைக் கிராமத்தைச் சேர்ந்த 100 மாணவர்களுக்குகற்றல்உபகரணங்கள்வழங்கப்பட்டன.2020 புதிய கல்வியாண்டுக்கு முன்னராக வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் இவை வழங்கப்பட்டன. கன்னன்குடா குஞ்சதீவுபகுதியில்வைத்து 100 மாணவர்களுக்கான கற்றல்உபகரணங்கள்கடந்த வாரம் வழங்கப்பட்டன. (க-2220)

# புத்தாண்டு ராசிபலன் 2020

## யோகம் தரும் ஆண்டு

பிறக்கப்போகிற புத்தாண்டு மகரம் ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனி காலம் என்றாலும் 2020ஆம் ஆண்டு உங்களுக்கு யோகமான ஆண்டாக அமைந்துள்ளது. இந்தப் புத்தாண்டில் பார்க்கிற வேலையை விட்டு விட்டு வேறு வேலைக்குப் போகலாமா என்றும் யோசித்துக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்காகவே இந்தப் புத்தாண்டுப் பலன்களைத் தருகிறோம். உங்களின் பல கேள்விகளுக்கும் இந்த புத்தாண்டுப் பலன்களில் விடை கிடைக்கும். மகரம் ராசிக்காரர்களுக்கு 2020ஆம் ஆண்டு நல்ல செய்திகள் தேடி வரும்.

2020ஆம் ஆண்டு புத்தாண்டு பிறக்கும்போதே கிரகங்கள் மிதுனத்தில் ராகு, விருச்சிகத்தில் செவ்வாய் தனுசு லக்னம் லக்னத்தில் கேது, குரு, சூரியன், சனி, புதன், மகரத்தில் சுக்கிரன் கும்பத்தில் சந்திரன் எனக் கிரகங்களின் சஞ்சாரம் அமைந்துள்ளது.

விருச்சிக ராசிக்காரர்களுக்குப் புத்தாண்டு அருமையான யோக பலன்களையும் நன்மைகளையும் தரப்போகிறது. 2020 புத்தாண்டில் முக்கியமான கிரகப்பெயர்ச்சி சனிப்பெயர்ச்சிதான் ஆண்டின் துவக்கமான ஜனவரியிலேயே தனுசு ராசியில் இருந்து மகரத்திற்கு சனி திருக்கணிதப்படி இடப்பெயர்ச்சி அடைகிறார். இந்த கிரகப்பெயர்ச்சியால் மகரம் ராசிக்காரர்களுக்கு என்ன நன்மைகள் நடக்கும் என்று பார்க்கலாம். மகரம் ராசிக்காரர்களுக்கு உங்கள் ராசிநாதன் சனி உங்கள் ராசியில் வந்து




அமர்வது அற்புதமான காலகட்டம். முக்கிய கிரகங்களின் சஞ்சாரத்தைப் பார்த்தால் உங்களுக்கு விரைய ஸ்தானத்தில் குரு கேது சஞ்சரிக்கின்றனர். விபரீத ராஜயோக காலம். குருவின் பார்வையால் பலவித நன்மைகள் நடைபெறப்போகின்றன.

மகரம் ராசிக்கு 2020ஆம் ஆண்டு பல நன்மைகள் ஏற்படும். முன்னேற்றத்துடன் கூடிய மாற்றங்களும் நடைபெறும். உங்கள் சொந்த வீட்டுக்கு சனி வருகிறார். கடின உழைப்பாளிகள் நீங்கள்தான். மகர ராசிக்காரங்களுக்கு தொழில் வருமானம் நன்றாக இருக்கும். குரு 12ஆம் வீட்டில் விரய ஸ்தானத்தில் இருக்கிறார். சுப செலவுகள் நிறைய நடைபெறும். உடன் பிறந்தவர்களுக்குச் செலவு செய்வீர்கள். மகரம் வேலைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பாடுபட்டு உழைப்பீர்கள்.

ஏழரைச் சனியில் ஜென்ம சனி, விரய குரு என கிரகங்கள் அமைந்துள்ளன. சனிபகவான் ஆட்சி நிலையில் அமையும் போது எந்தக் கெடுதலும் செய்ய மாட்டார். உங்களுக்கு மிகச்சிறந்த மகாலட்சுமி யோகம் வருகிறது. செல்வச் செழிப்பு ஏற்படும். சனியின் பார்வை ஏழாம் வீட்டின் மீது விழுகிறது. திருமணம் முயற்சிகள் கைகூடி வரும். திருமணம் முடித்தவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தான தர்மங்கள் செய்வீர்கள். குரு பகவான் அவரது வீடான தனுசு ராசியில் ஆட்சி பெற்றிருப்பது அற்புதமான காலகட்டம். 12ஆம் வீட்டு அதிபதி 12ஆம் வீட்டில் அமர்வது விபரீத ராஜயோகம். கடந்த காலங்களில் வேலை இழப்பைச் சந்தித்த உங்களுக்கு இந்த ஆண்டு நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்கும். இந்த ஆண்டு நவகிரகங்களின் அருளாசியும் கிடைக்கிறது. மாணவர்களுக்குத் தூர தேச பயணம் அமையும். வெளிநாட்டுக் கல்விக்கான வாய்ப்பு ஏற்படும். அதிர்ஷ்டகரமான வாய்ப்புகள் தேடி வரும். சமூகத்தில் மதிப்பு மரியாதை தேடி வரும். பதவி வரும் போது பணிவு வரவேண்டும்.

# துர்க்கை அம்மனுக்கு ஏற்றப்படும் எலுமிச்சை விளக்கின் முக்கியத்துவம் என்ன...?



எலுமிச்சை ஒரு ராஜ கனியாகப் போற்றப்படுகிறது. தீய ஆவிகளை அகற்ற எலுமிச்சையானது திரி சூலம், மூர்த்திகள், யாக குண்டம் மற்றும் கதவின் இரு புறங்களிலும் வைக்கப்படுகிறது. கண் திருஷ்டியை நீக்கி பாதுகாப்பை அளிக்க இவை மிளகாயுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகிறது.

**எலுமிச்சை விளக்குகள்** துர்க்கா பூஜையின் போது எலுமிச்சை விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. எலுமிச்சையை செங்குத்தாக சரிபாதியாக வெட்டிக் கொள்ளவேண்டும், கிடைமட்டமாக வெட்டக் கூடாது. சாற்றைப் பிழிந்து வெளியேற்ற வேண்டும். பின் அந்த பாதி எலுமிச்சையை உட்புறம் வெளியே வருமாறு திருப்பி, ஒரு கிண்ணம் போல் செய்து, அதில் எண்ணெய் அல்லது நெய் கொண்டு நிரப்பித் திரியிட்டு விளக்கேற்ற வேண்டும். எலுமிச்சை எம்மைப் பிரதிபலிக்கும் ஒரு பொருளாகவும் விளங்குகிறது. மேலும் நாம் எமது உட்பகுதியைக் கடவுளுக்குக் காட்ட வேண்டும். மாயை, பேராசை, காமம் மற்றும் கோபம் ஆகியவற்றை கடவுளுக்கு முன்பாக வெளியே எறிய வேண்டும். எலுமிச்சைக்கு உள்ளே இருக்கும் வெள்ளைத் தோல் நமது தூய மனதையும், இருண்ட பகுதி (மறைந்திருக்கும் பச்சை விதைகள்) மாயையையும் குறிக்கும்.

**திரியின் முக்கியத்துவம்:**
வாழைத் தண்டில் செய்யப்பட்ட திரியானது குற்றங்களையும், ஜென்ம பாவங்களையும் நீக்குகிறது. பருத்தியில் செய்யப்பட்ட திரி நல்ல அதிர்ஷ்டத்தையும், தாமரைத் தண்டில் செய்யப்படும் திரி முற்பிறவி வினைகளை நீக்கி வளமான வாழ்க்கையை நிறுவவும், வெள்ளைப் பூண்டு வகை செடியில் செய்யப்படும் திரி அதிர்ஷ்டம் மற்றும் சொத்துக்களைப் பெருக்கவும், புதிய மஞ்சள் பருத்தி துணி, பராசக்தியின் அருளைப் பெற்று சிக்கல்களிலிருந்து விடுபடவும் மற்றும் புதிய சிவப்புப் பருத்தித் துணி திருமணம் மற்றும் குழந்தை பெறும் தடைகளை நீக்கி மாயம், மந்திரம், தந்திரம் போன்றவற்றிலிருந்து விடுபடவும் உதவுகின்றன.

**விளக்கேற்ற உகந்த நாள்கள்:** நோய்களால் அதிகம் அவஸ்தைப்படுவோர், அது விரைவில் குணமாக ஞாயிறு மாலை ராகு காலத்திலும், குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகம் இருந்தால் செவ்வாய்க்கிழமையன்று ராகு காலத்திலும், குடும்பம் மற்றும் தனிப்பட்ட வேறுசில வேண்டுதல்களுக்கு வெள்ளிக்கிழமை அன்று ராகு காலத்திலும், 2 எலுமிச்சை விளக்கேற்றி அம்மனை மனமுருகி வேண்டினால், பிரச்சினைகள் அனைத்தும் நீங்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

## மயங்கி...

ளார்.

காய்ச்சல் காரணமாக தனியார் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் மருந்து எடுத்துள்ளார். நேற்று வேலைக்குச் சென்றுள்ளார். மதியம் வேலைத் தளத்தில் சாப்பிட்டுள்ளார். சாப்பிட்டதும் மயங்கி விழுந்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(ஓ,5,26)

## விபத்தில்...

கப்படுகின்றது.

கைதடியைச் சேர்ந்த சோமசுந்தர சர்மா ராமலிங்க சர்மா (வயது-67) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். கடந்த 13ஆம் திகதி கைதடியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவ இடத்தில் மயங்கி வீழ்ந்த அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார், இறப்பு விசாரணையை மேற்கொண்டார்.

(ஓ,5,26)

## அடிபணியாது...

அவர் குறிப்பிட்டார்.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு சர்வதேசத்துக்கு அடிபணிந்து செயற்பட்டது. இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்துக்கு ரணில் அரசு இணை அனுசரணை கூட வழங்கியிருந்தது. அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் அணியினருக்கு நாட்டு மக்கள் தக்க பதிலடி கொடுத்து ராஜபக்ஷ ஆட்சியைக் கொண்டு வந்தார்கள்.

ராஜபக்ஷ அரசு வெளிநாடுகளுக்கோ அல்லது சர்வதேச அமைப்புகளுக்கோ ஒருபோதும் அடிபணியாது. நாட்டுக்கு எதிரான எந்தத் தீர்மானங்களையும் ஏற்காது. ராஜபக்ஷ அரசின் இந்த நிலைப்பாடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மார்ச் மாத கூட்டத் தொடரில் எம்மால் தெரிவிக்கப்படும்.

இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் மத சக வாழ்வு அத்தியாவசியமாகும். இவை இல்லாமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அதனால் இன மற்றும் மத நல்லிணக்கத்தை நடைமுறையில் காட்ட வேண்டும். அதற்கு சிங்கள மக்களுடன் தமிழ், முஸ்லிம் மக்கள் கைகோர்த்து இந்த அரசுடன் இணைந்து பயணிக்க வேண்டும்.

**தேர்தல்**

மார்ச் மாதம் 3ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும். ஏப்ரல் நடுப்பகுதியில் பொதுத் தேர்தல் நடத்தப்படும். நாடாளுமன்றத் தேர்தலிலும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஓரணியில் நின்று போட்டியிடும், என்றார்.

(ஓ,5,22)

## ஆஷிகா...

இரவு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பளுதூக்கும் விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி. விஜயபாஸ்கர் ஆஷிகாவுக்கு அனைவரும் எழுந்து நிற்க விருது வழங்கப்பட்டது. இரண்டாவது முறையாக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இவர் தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், திறந்த வயதுப் பிரிவினருக்கான தேசிய மட்ட போட்டி, இளநிலை மற்றும் முதுநிலை, அத்துடன் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளு தூக்கல் போட்டியில் தங்கப் பதக்கங்களையும் சுவீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் பயிற்றுவிப்பாளரும், தந்தையுமாகிய விஜயபாஸ்கரும் கௌரவிக்கப்பட்டார். (ஓ,5,23,422)

## மாற்றுத்...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

புளொட் அமைப்பின் மையச் செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்களே மாற்றுத் தலைமை பற்றிப் பேசுகிறார்கள். பல்வேறு காரணங்களால் அவர்கள் அதிலிருந்து வெளியில் சென்றார்கள். அவை நிச்சயமாக மிகப்பெரிய அரசியல் காரணங்களாக இருக்கவில்லை. அவர்களுடைய நிலைப்பாட்டின் படி மாற்றுத் தலைமை என்பதைக் காட்டவேண்டும். அப்படிச் சொல்பவர்கள் மத்தியில் கூட ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. ஒற்றுமையாகவும், மாற்றாகவும் இருக்கக்கூடிய தலைமையையும், தலைவரையும் எம்மால் காணமுடியவில்லை. சரி பிழைக்கும் அப்பால் கூட்டமைப்பானது, இருக்கின்ற அமைப்புகளுக்குள் ஒரு பலமான, மக்கள் பிரச்சினைகளில் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கிறது. தீர்வு விடயத்திலும் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கிறது. அந்த 'அடிப்படையிலேயே கூட்டமைப்புடன் தொடர்ந்து இருக்கிறோம்.

போர்முடிவடைந்த பின்னர் தீர்வைப் பெறுவதற்கான ஒரே வழி நாடாளுமன்றம் ஊடாக முயற்சிப்பதுதான். அதை நாம் செய்கிறோம். தொடர்ந்தும் அதைதான் செய்யலாம். மாற்றுத் தலைமை பற்றி பேசுபவர்கள் நாடாளுமன்றம் சென்றாலும் அதைதான் செய்ய போகின்றார்கள். வேறு விடயங்களை அவர்கள் செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை.

கடந்த காலங்களைப்போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களைப் பெறுவது கேள்விக்குறியாக இருந்தாலும் அதிகளவான ஆசனங்களைப் பெறும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுச் செல்லப்போகின்றோம் என்று நாம் என்றுமே கூறிய தில்லை. இன்றும் அதே நிலைப்பாடே எம்மிடம் உள்ளது. எங்களைப் பொறுத்தவரையில் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும். சில வேளைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதற்குள் இருக்கும் கட்சிகளுக்குமிடையில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அந்த ஒற்றுமையை நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதில் அவதானமாக இருக்கின்றோம்.

மாற்று அணி உருவாகும் போது அது கூட்டமைப்பை சிறிதளவு பாதிக்க செய்யும். கூடியவரையில் ஒத்த கருத்துள்ள கட்சிகளை ஒன்றாக்க முடியுமாயின் அதைச் செய்யவேண்டும். அது எவ்வளவுதூரம் சாத்தியமென்று எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் அந்தப் பிளவு இன்று கூடுதலாகவே இருக்கின்றது. அதனை மீண்டும் ஒற்றுமைப்படுத்துவது சாத்தியமில்லாவிட்டாலும் கூட இரண்டு மூன்று அணிகளாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக்களே அதிகமாக உள்ளன. எனவே மக்களே இனி தீர்மானிக்க வேண்டும் - என்றார்.

(ஓ,5,110)

## மரத்தான்...

புத் தொடக்கம் தீவகம் வரையில் 'மரத்தான்' போராட்டங்கள் நடத்தப்பட்டன.

அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், தன்னார்வலர்களும், பொதுமக்களும் இணைந்து மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று, அந்தந்தப் பகுதிகளில் போராட்டங்களில் ஈடுபட்டனர். மணல் அகழப்படும் பிரதேசங்க ளில் உள்ள பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்சி கிழக்கு, குடாரப்பு பகுதியில் நேற்றுக் காலை போராட்டம் ஆரம்பித்தது. அங்கு மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிக்குச் சென்ற போராட்டக்காரர்கள், மணல்அகழ்வால் ஏற்பட்ட குழிகளுக்குள் இறங்கி நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து மருதங்கேணிப் பிரதேச செயலகத்துக்கான மனுவும் கையளிக்கப்பட்டது. பிரதேச செயலர் சார்பில், உத்தியோகத்தர் ஒருவர் மனுவைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர், கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பகுதியில் மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிகளுக்குச் சென்று அங்கும் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சாகவச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கெற்பெலி, கச்சாய் பகுதிகளில் மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டதுடன், அங்கும் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

தீவகப் பகுதிகளான மண்கும்பான் மற்றும் சாட்டிப் பகுதிகளில் மணல் அகழப்படும்பகுதிகளையும் குழுவினர் பார்வையிட்டதுடன் அங்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியாக யாழ். பண்ணைப் பகுதியில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்தோடு மணல் அகழ்வுதொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்செயற்பாட்டையும் முன்னெடுத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், போராட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

'கடந்த காலங்களில் மகேஸ்வரி நிதியம் ஊடாக மணல் கொள்ளை இடம்பெற்றது. பெருந்தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டது. இதற்கு ஆதாரங்கள் உள்ளன. அவற்றுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இல்லை. இது தொடர்பில் கேள்விகள் கேட்டவர்கள் கடந்த காலங்களில் சுட்டுக் கொல்லப்பட்டனர். தற்போது மணலைக் கொண்டு செல்வதற்கு வழித்தட அனுமதியை நீக்கியுள்ளார்கள். மணல் கொள்ளை அதிகரித்துள்ளது. இவ்வாறு அனுமதி நீக்கியது, தங்களின் பங்காளர்கள் பணம் உழைப்பதற்காக என்று கேட்கவேண்டியுள்ளது' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளையோர் அணி இந்தப் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தது. வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சே.கலையமுதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஓ,5,26,105)

## நாடு...

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினர் இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவார்கள் என்று ஜனாதிபதி வெளியிட்டுள்ள அதி சிறப்பு அரசிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை உட்பட 25 நிர்வாக மாவட்டங்கள் மற்றும் தேசிய நீர் பரப்பு அடங்கலாக முப்படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவார்கள்.

(ஓ,5,22)











# இன்றைய நாள்

**மேடம்:** உங்களிடம் உதவி பெற்றவர் நன்றி மறந்து செயல்படுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். லாப விகிதம் அதிகரிக்கும்.

**இடபம்:** உங்கள் சிந்தனையில் புதிய மாற்றம் ஏற்படும். செயல்கள் நிறைவேற நல்லவர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் அபிவிருத்தியாகும்.

**மிதுனம்:** உங்கள் மனதில் புதிய ஞானம் பிறக்கும். சம யோசிதமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்கு படிப்படியாக நிறைவேறும்.

**கடகம்:** முக்கிய பணிகளை தாமதமின்றி நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட தன்மை இருக்கும். குறைந்த அளவில் பணம் கிடைக்கும். உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை பெறுவீர்கள்.

**சிம்மம்:** உங்களின் முயற்சிக்குரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். ஆதாய பண வரவு பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும்.

**கன்னி:** உறவினரின் செயலை விமர்சிக்க கூடாது. தொழில், வியாபா ரத்தில் பணி சுமை அதிகரிக்கும். கொஞ்சம் பணம் கடன் பெறுவீர்கள். உணவு பொருள் தரம் அறிந்து உண்ணவும்.

**துலாம்:** எவரிடமும் சாந்த குணத்துடன் பேசுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதியவர்களின் உதவி வந்து சேரும். பண வரவில் திருப்திகரமான நிலை உண்டு. வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் மாறுபட்ட அணுகுமுறை சிரமம் தரலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். செலவுகளுக்கு தேவையான பணம் கிடைக்கும்.

**தனுசு:** நண்பரின் பேச்சு மனதில் உற்சாகம் தரும். முக்கியமான விஷயத்தில் சுமூக தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும்.


**மகரம்:** நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். தாராள பண வரவு கிடைக்கும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** சிறு செயலையும் சம யோசிதமாக நடத்த வேண்டும். தொழில், வியாபாரத்தில் சிறு அளவிலான குறுக்கீடு வரலாம். மிதமான அளவில் பண வரவு இருக்கும்.

## ஆஸ்திரேலியாவில்

# தண்ணீர் திருட்டு!



கான்பெரா, டிசெ. 23

ஆஸ்திரேலியாவில் வரலாறு காணாத அளவுக்கு வெப்பமும், வறட்சியும் நிலவுகிறன. தண்ணீருக்காக மக்கள் அங்கலாய்த்து வரும் நிலையில் 3 லட்சம் லீற்றர் தண்ணீரைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் நகருக்கு அருகே உள்ள இவான்ஸ் எனும் சிறிய நகரில் தான் விவசாயி ஒருவரின் வீட்டில் இருந்து 3 லட்சம் லீற்றர் தண்ணீர் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று ஆஸ்திரேலியாவில் உள்ள நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவான்ஸ் நகரைச் சேர்ந்த விவசாயி தன்னுடைய பண்ணையில் தன்னுடைய பயன்பாட்டுக்கும், விவசாயத்துக்கும் தண்ணீரைச் சேமித்து வைத்திருந்தார். ஆனால், கடந்த 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதிக்கு இடையே 3 லட்சம் லிட்டர் தண்ணீரை யாரோ சிலர் கொள்ளையடித்துள்ளனர்.

காலநிலை மாறுபாடு காரணமாக ஆஸ்திரேலியாவில் இந்த ஆண்டு வரலாறு காணாத அளவுக்கு வெயிலும், வறட்சியும் நிலவுகிறன. இது தவிர ஆஸ்திரேலிய காடுகளில் காட்டுத்தீ ஆங்காங்கே பற்றி எரிந்து வருகிறது. இதனால், மக்கள் தங்களுடைய கோடைக்காலத்தை இன்பமாகக் கழிக்க முடியாமல் திணறுகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கு முன், முர்விலும் பாவ் எனும் சிறிய நகரில் ஏறக்குறைய 25 ஆயிரம் லீற்றர் தண்ணீர் 6 முதல் 7 டேங்கரில் வைக்கப்பட்டு இருந்த நிலையில் அதுவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சாதாரணமாக வாழ்வதற்குத் தேவையான குடிநீரைப் பெறுவதற்கே போராட்டம் நடத்த வேண்டிய சூழலுக்கு மக்கள் எதிர்காலத்தில் தள்ளப்படும் அபாய சூழலை விளக்கும் மோசமான கற்பனை உலகை இந்தச் சம்பவம் உணரச் செய்கிறது.

ஆஸ்திரேலியாவில் கடந்த சில வாரங்களாகக் கடுமையான வெப்பம் வாட்டி வதைத்து வருகிறது. சராசரியாக 40.9 டிகிரி செல்சியஸ், அதிகபட்சமாக 41.9 டிகிரி செல்சியஸ் வெப்பமும் பதிவாகியுள்ளது.

காலநிலை ஆய்வாளர் டேவிட் காரோலி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், 'காலநிலை மாற்றம் தீவிரமடைந்துள்ளதன் விளைவே கடுமையான வெப்பம் சுட்டெரிக்கிறது. ஒரு டிகிரி முதல் 15 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரித்துள்ளது. இதோடு மட்டுமல்லாமல் காட்டுத் தீ ஏற்பட்டு, ஏராளமான மரங்களும் எரிந்து வருகின்றன. கடந்த 2 மாதங்களில் மட்டும் சிட்னியில் காஸ்பர்ஸ் மலைப்பகுதியில் 74 லட்சம் ஏக்கர் வனப்பரப்பு எரிந்துள்ளது' எனத் தெரிவித்துள்ளார். (ம)

# மதத்தை பழித்தமைக்காக பேராசிரியருக்குத் தூக்கு!

இஸ்லாமபாத், டிசெ. 23

மத விரோதக் கருத்துக்களைப் பதிவிட்டமைக்காக பாகிஸ்தானில் மதகுரு ஒருவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த மதகுரு 'பேஸ்புக்' சமூக வலைத்தளத்தில் மத விரோத கருத்துகளை வெளியிட்டதாக கூறப்படுகிறது. பாகிஸ்தானைப் பொறுத்தமட்டில் மதவிரோதக் கருத்துகளை வெளியிடுவது கடும் குற்றமாகக் கருதப்படுகிறது. இந்த குற்றத்தைசெய்து, அது நிரூ பிக்கப்பட்டால் தூக்கு தண்டனை விதிப்பது வழக்கம். இந்த நிலையில் ஜுனைத் ஹபீஸ் மத விரோத கருத்துகளை வெளியிட்ட வழக்கில் 2013ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.




விசாரணை முடிந்த நிலையில், அவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறிய செசன்ஸ் நீதிபதி காசிப் கய்யாம், ஜுனைத் ஹபீசுக்கு தூக்கு தண்டனை விதித்து நேற்று பரபரப்புத் தீர்ப்பு வழங்கினார். (ம)



## சிரியாவில் மீண்டும் தாக்குதல் 60 அப்பாவிகள் துயரச் சாவு!

டமஸ்கஸ், டிசெ. 23

சிரியாவில் பாதுகாப்புப் படை மற்றும் கிளர்ச்சியாளர்கள் இடையே நடந்த தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் 60க்கும்அதிகமானவர்கள்கொல்லப்பட்டுள்ளனர்.

இதுகுறித்துசிரியாவில்இயங்கும்மனித உரிமை அமைப்பு "சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மாரெட் அல் நுமன் நகரத்தில் கிளர்ச்சி யாளர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த சண்டையில் கடந்த 24 மணி நேரத்தில் 60க்கும்அதிகமானவர்கள்கொல்லப்பட்டுள்ளனர். ரஷ்ய போர் விமானங்கள் கிளர்ச்சி யாளர்கள் பகுதியில் தொடர்ந்து வான்வழித் தாக்குதலை நடத்தின'' என்றும்தெரிவித்துள்ளது. (ம)


## மரண அறிவித்தல்



### திருமதி பாக்கியம் துரைராஜா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் துரைராஜா 21.12.2019 சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ராசம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற துரைராஜாவின் (துரை) அன்பு மனைவியும், V.T.ராஜேந்திரா (ஓய்வுநிலை BOC முகாமையாளர், Maths Teacher, Colombo - Unique College), நீலா (கிளி), உமாதேவி (ரவி), இலங்காதேவி (பபா - ஜேர்மனி), காஞ்சனாதேவி (பேபி - ஹொலண்ட்), சுதேந்திரன் (UK), நிரஞ்சனாதேவி (ராசாத்தி - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாவதி (கமலா), சற்குணம் நித்தியானந்தம் (செல்வம்), சிவராஜா, பழனித்துரை (பழநி, ரவி), ஜெயராணி (ராணி), புவனபாஸ்கரன் (பாஸ்கரன்) ஆகியோரின் மாமியாரும், டிலுக்ஷன் (டிலு - Australia), சுலக்ஷன் (சுதன் - UK), கீர்த்தனா, நளினி (சிங்கப்பூர்), லாவர்ணன் (லாவா), கவிவர்ணன் (கவி), அனோஜன் (ஜேர்மனி), கவிதாரணி (ஹொலண்ட்), அபிலாஷ் (UK), காவியா, ரம்யா, சந்தியா (கனடா), ஹரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பவளம், ராஜதுரை (ராசு), தங்கம்மா (செவ்வந்தி), நல்லம்மா மற்றும் கமலாம்பாள் (கமலம்), யோகாம்பாள் (யோகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, சிவபாக்கியம், தி.கந்தையா, ப.கந்தையா, செல்வநாயகம், பெருமாள்பிள்ளை, S.V.கந்தையா, சுப்பிரமணியம், மாணிக்கம், செல்லத்துரை (இராமலிங்கம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அம்மன் வீதி திருநெல்வேலி மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை (24.12.2019) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் (1 மணி ) ஒருமணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-**

**மகன்மார்**
V.T.ராஜேந்திரா - 077 228 6923
V.T.சுதேந்திரன் - 071 475 7624

**மருமக்கள்**
சற்குணம் -077 309 6882
செல்வம் - 077 401 5621

"இந்திர பவனம்"
அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

**021 222 3475**

(CS30111)(11.17)



## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 . 07 . 1948

உதிர்வு 23 . 12 . 2011

### அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

*(உரிமையாளர் - விநாயகர் ரேணிங் வேக்ஸ்)*

புன்சிரிப்போடு எமை அணைத்தவரே - அப்பா !
பூத்த உம் பூக்கள் தவிக்குதப்பா
பூவுலகில் எம் மனங்கள் வெடிக்குதப்பா
பூக்காதோ மீண்டும் உங்கள் வாழ்வு
பூக்காதோ மீண்டும் எங்கள் வீடு
புலம்பி நாம் துடிக்கின்றோம்
உங்கள் ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிக்கின்றோம்.

என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும் .........

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(AC 4430)(04.17)



## மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 03 . 1937

இறப்பு 18 . 12 . 2019

### கேதுசிகாமணி பாக்கியம்

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கேதுசிகாமணி பாக்கியம் அவர்கள் 18.12.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - செல்லாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வெற்றிவேலு கேதுசிகாமணி (கேதீஸ்வரம்) அவர்களின் அன்பு மனைவியும், நகுலேஸ்வரன் (கனடா), முத்துலக்ஷ்மி (பிரான்ஸ்), விமலேஸ்வரன் (சுதுமலை), புஸ்பலக்ஷ்மி (சுதுமலை), இராஜலக்ஷ்மி (வசந்தி - சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும், பராசக்தி (கனடா), நீதிராசா (பிரான்ஸ்), இராசநாயகி (சுதுமலை), கனகலிங்கம் (சுவிஸ்), நந்தினி (வவுனியா), காலஞ்சென்ற தேவதாசன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிஷயகள் இன்று (23.12.2019) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுதுமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


மாவடி வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (cs.30114) (13.17)

தகவல்:
குடும்பத்தினர்.

# தேசிய மட்ட பளுதூக்கலில் யாழ் இந்துவுக்கு 5 பதக்கம்







கொழும்பு, டிசெ. 23
இலங்கை பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய இளநிலைப் பிரிவினருக்கான பளுதூக்கலில் யாழ் இந்துக் கல்லூரி வீரர்கள் ஒரு தங்கம், இரு வெள்ளிப் பதக்கங்கள், இரு வெண்கலப் பதக்கங்கள் உட்பட 5 பதக்கங்களைச் சுவீகரித்தனர்.

இலங்கை பளுதூக்கும் சம்மேளனம் நடாத்திய தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான பளுதூக்கும் போட்டி அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இதில் யாழ் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த யு.சுஜந்தன் 20 வயதுப் பிரிவில் 73 கிலோ நிறைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும், கே.தரிந்துஜன் 81கிலோ நிறைப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், 17 வயதுப் பிரிவில் எஸ்.அபிஷன் 102 கிலோ நிறைப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், வி.கிலான் 89 கிலோ நிறைப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும், எஸ்.சஜிசன் 67 கிலோ நிறைப் பிரிவில் வெண்கலப் புதக்கத்தையும் சுவீகரித்தனர். (ம-422)



## வலுவான வேகப்பந்து வீச்சு இந்தியாவிடம்தான் உள்ளது

ஸ்ரெய்ன் பேட்டி

உலகில் உள்ள ஏனைய அணிகளிலும் பார்க்க இந்திய அணிதான் வலுவான வேகப்பந்துவீச்சைக் கொண்டுள்ளது - என்று தெரிவித்தார் தென்னாபிரிக்கா அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன்.

இது. தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:


இந்தியாதான் தற்போதைய சிறந்த வேகப்பந்து வீச்சைக் கொண்ட அணி. அந்த அணியால் எந்தவொரு அணியிணையும் வீழ்த்த முடியும். அதேநேரம் சிறந்த வேகப்பந்து வீச்சாளர் என்று தற்போது ஒருவரைக் குறிப்பிட வேண்டுமானால் பட் கம்மின்ஸைத்தான் குறிப்பிடுவேன். சச்சினுக்கு எதிராக வீசிய அனுபவங்கள் வலிமையானவை - என்றார். (ம)

## டோனியிடம் கற்பேன் என்கிறார் சாம் கரன்

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தலைமையில் விளையாட ஆர்வமாக உள்ளேன் என இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் சாம் கரன் தெரிவித்தார். 11வது ஐபிஎல் டி20 கிரிக்கெட் போட்டி தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் நடக்கவுள்ளது. இதில் வீரர்கள் தக்க வைப்பு, விடுவிப்பு என பல மாற்றங்கள் முடிந்ததையடுத்து வீரர்கள் ஏலம் நேற்றுமுன்தினம் கொல்கத்தாவில் நடந்தது. சென்னை அணியில் கரன் இடம்பெற்றுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

'சென்னைக்கு வந்து எனது புதிய அணி வீரர்களை சந்திக்க ஆர்வமாக உள்ளேன். அனுபவம் வாய்ந்த வீரரும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவருமான மகேந்திரசிங் டோனி மற்றும் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. டோனியின் தலைமையில் விளையாடவும் ஆர்வமாக உள்ளேன். நிச்சயம் கோப்பையை கைப்பற்றி சென்னை ரசிகர்களுக்கு விருந்தளிப்போம்' என்றார். (ம)



## மனோ ஜஸ்மின் கிண்ணம் வென்றது

கரணவாய், டிசெ. 23
மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் மனோகரா பிறிமியர் லீக் வலைப்பந்தாட்டத்தில் கிண்ணம் வென்றது மனோ ஜஸ்மின் அணி.

மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் மனோகரா பிறிமியர் லீக்கின் வலைப்பந்தாட்டத்தின் இறுதியாட்டம் நேற்று குறித்த மைதானத்தில் இடம்பெற்றது. இந்த இறுதியாட்டத்தில் மனோ ஏஞ்சல்ஸ் அணியும் மனோ ஜஸ்மின் அணியும் மோதின. பரபரப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் முதல்பாதி யாட்டத்தில் இரு அணிகளும் 4:4 என சம நிலையில் இருந்தன. இரண்டாம் பாதியில் சிறிது ஆதிக்கம் செலுத்திய ஜஸ்மின் அணி 10:09 என வெற்றிபெற்று சம்பியனானது. (ம-108)



## பொறுப்புணர்ந்து விளையாடுகிறேன்

ஸ்ரேயாஸ் தெரிவிப்பு

இந்திய அணியில் தற்போது எனது பொறுப்பை உணர்ந்து விளையாடி வருகின்றேன் என்று தெரிவித்தார் அந்த அணியின் நான்காம் நிலை வீரரான ஸ்ரேயாஸ். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொறுப்பும் முதிர்ச்சியும் கூடியுள்ளதால் இரண்டு அரைச் சதங்கள் கிடைத்தன. கிரிக்கெட்டின் ஆரம்ப காலக்கட்டத்தில் நான் அதிரடி ஆட்டம் ஆடி வந்தேன் ஆனால் பொறுப்பைச் சுமக்கமாட்டேன். என்னுடைய இயல்பான ஆட்டத்தின் மேல் பாரத்தை போட்டுவிட்டு என் பாணியில் போய்க்கொண்டிருப்பேன்.

ஆனால் உயர்மட்ட அளவில் நாம் எமது ஆட்டத்தையும் முதிர்ச்சியையும் இன்னொரு கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டியது அவசியம். அணி என்ன எம்மிடம் எதிர்பார்க்கிறதோ அதற்கேற்ப ஆட வேண்டும். சென்னையில் அப்படித்தான் ஆடினேன். அப்போது பெரிய ஷொட்களுக்கு உடனடியாகப் போக வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டேன். டெல்லி கேப்பிடல்ஸ் பயிற்சியாளர் ரிக்கி பொண்டிங் மிகவும் திறமைவாய்ந்தவர். எந்த ஒரு வீரரையும் அவர் அரவணைப்பார். இதுதான் அவருடைய மிகச்சிறந்த குணம். அனைவரையும் சமமாக நடத்துவார். பயிற்சியாளராக அவரது குணம் பிரமாதமானது. மனிதர்களைக் கையாள்வதில் அவரது திறமை தனித்துவமானது - என்றார். (ம)



# மறக்க முடியாத ஆட்டம்: சச்சின் நினைவுப் பகிர்வு

இந்தியக் கிரிக்கெட்டுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தேன். 2003 ஆம் ஆண்டு உலகக்கோப்பை போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்திலும், இலங்கைக்கு எதிரான ஆட்டத்திலும் தீவிரமான வயிற்றுப்போக்கால் உள்ளாடையில் டிஷ்யூ பேப்பர் வைத்துக்கொண்டு விளையாடினேன் என்று சச்சின் டெண்டுல்கர் மனம் திறந்து பேசியுள்ளார்.

2003ஆம் ஆண்டு உலகக்கோப்பை போட்டி தென் ஆப்பிரிக்காவில் நடந்தது. பாகிஸ்தானுக்கு எதிராக 2003, மார்ச் முதலாம் திகதி செஞ்சூரியன் நகரில் இந்திய அணி மோதியது. இதில் முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி சயித் அன்வர் சதத்தால் 7 விக்கெட் இழப்புக்கு 273 ரன்கள் குவித்தது.

உலகக்கோப்பை போட்டியில் இதுவரை பாகிஸ்தானிடம் இந்திய அணி தோற்றதில்லை என்ற பெயரைக் காப்பாற்றும் வகையில் இந்திய அணி களமிறங்கியது. இந்த ஆட்டத்தில் சச்சின் தொடக்கத்தில் இருந்தே சிறப்பாக ஆடி 98 ரன்கள் சேர்த்து சதம் அடிக்கும் நிலையில் அக்தர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இருப்பினும் அந்த ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

அதேபோல சூப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் மார்ச் 10ஆம் திகதி ஜோகன்ஸ்பர்க் நகரில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணி மோதியது. இதில் 97 ஓட்டங்கள் விளாசிய சச்சின் ஆட்டமிழந்தார். இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 296 ரன்கள் குவித்தது. இலங்கை அணி 109 ஓட்டங்களில் ஆட்டமிழக்க 183 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வென்றது.

இந்த இரு ஆட்டங்களிலும் சச்சின் டெண்டுல்கரின் பேட்டிங் அளப்பரியது. இரு ஆட்டத்திலும் நூலிழையில் சதத்தை சச்சின் தவறவிட்டார். இந்த உலகக்கோப்பைத் தொடரில் சச்சின் 673 ஓட்டங்கள் சேர்த்து தொடர் நாயகன் விருது பெற்றார். இதுவரை சச்சின் சேர்த்த 673 ஓட்டங்கள் என்ற சாதனையை எந்த வீரரும் உலகக்கோப்பையில் முறியடிக்க வில்லை.

உடல்நலக் குறைவு ஏற்பட்ட சூழலில், இந்த இருபோட்டியில் விளையாடியதை சச்சின் மனம் திறந்து பேசியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கடந்த 2003ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் நான் விளையாடியதை என்னால் மறக்க முடியாது. அந்த இரு போட்டிகளுக்காக நான் எடுத்த முயற்சிகளும் அதிகம். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் என்னால் நின்று விளையாடக் கூடமுடியாத அளவுக்கு உடல் அசதியாக இருந்தது. உடலில் 500 கிலோ எடையைக் கட்டிவைத்தது போன்று இருந்தது. அணியின் உடல் தகுதி நிபுணர் ஆன்ட்ரூ லீபஸிடம் சிகிச்சை பெற்று உப்பு கலந்த நீரைப் பருகிக்கொண்டே விளையாடினேன். ஒரு கட்டத்தில் என்னால் நின்று விளையாடக் கூட முடியவில்லை. ஒருகட்டத்தில் ஒரு ஓட்டம் எடுத்துவிட்டு விழுந்துவிட்டேன், மீண்டும் எழ முயன்றேன் முடியவில்லை. என் உடம்புக்கு ஏதோ நடந்துவிட்டது என்று மட்டும் உணர முடிந்தது. ஆனால், கட்டுப்படுத்திக் கொண்டு உப்பு நீரைக் குடித்து விளையாடினேன்.

ஆனால், இலங்கைக்கு எதிரான ஆட்டத்தின் போது எனக்குக் கடுமையான வயிற்றுப்போக்கு, என்னால் நடக்கக் கூட முடியாத அளவுக்கு உடல் அசதி இருந்தது. எனக்கு நானே ஒரு செயலைச் செய்து கொண்டேன். இந்தச் செயலை வெளியே கூறியதில்லை, சிறிது கூச்சமாகவும் இருக்கிறது.

அந்தப் போட்டியின் போது நான் களமிறங்க முடிவு செய்தபின் உள்ளாடையில் டிஷ்யூ பேப்பர்களை வைத்துக் கொண்டு களமிறங்கி விளையாடினேன். அந்தப் போட்டியின் இறுதியில் என் உடல்நிலை மிகவும் மோசமாகி, நான் சோர்வடைந்தேன். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தின்போதே நான் வயிற்றுப்போக்கால் சோர்வடைந்திருந்தேன். உடல்நிலை சரியில்லாத நிலையில் இந்தப் போட்டியில் களமிறங்கியபோது மேலும் உடல்நிலை மோசமானது.

குளிர்பானத்தில் உப்பு கலந்து குடித்துவிட்டு விளையாடிய பின்னர் உடல்நிலை மோசமானது. என் உள்ளாடையில் வைத்திருந்த டிஷ்யூ பேப்பர்களால் எனக்கு அசவுகரியக் குறைவு ஏற்பட்டு விளையாடமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால், இடைவேளை நேரத்தில் நான் ஓய்வறைக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். ஆனாலும், நாட்டுக்காக என் உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் விளையாடி அணியை வெற்றிபெற வைத்தேன். அந்தப் போட்டியை மறக்க முடியாது" -- என்றார். (ம)

# இக்கட்டில் இலங்கை




பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தோல்வியைத் தவிர்க்கப் போராட வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது இலங்கை அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 191 ஓட்டங்களைப் பெற்று அனைத்து இலக்குகளையும் இழந்தது. சபிக் 63 ஓட்டங்களையும், அசாம் 60 ஓட்டங்களையும், அசார் அலி 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் குமார, எம்புல்டெனிய இருவரும் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 271 ஓட்டங்களைப் பெற்று அனைத்து இலக்குகளையும் இழந்தது. சந்திமல் 74 ஓட்டங்களையும், குசல் பெரேரா 48 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சான் அப்ரிடி 5 இலக்குகளையும், அப்பாஸ் 4 இலக்குகளையும், சொகைல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.





பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 3 இலக்குகளை இழந்து 555 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. அபிட் அலி 174 ஓட்டங்களையும், மசூட் 135 ஓட்டங்களையும், அசார் அலி 118 ஓட்டங்களையும், பாபர் அசாம் 100 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை அணிக்கு இலக்காக 476 ஓட்டங்கள் நிர்யணிக்கப்பட்டது. நேற்றைய நாள் முடிவில் இலங்கை அணி இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இறுதிநாள் இன்றாகும். (ம)

## பாகிஸ்தான் வரலாற்றில் முதல்முறை

துடுப்பாட்ட வரிசையில் முதல் நான்கு நிலைகளிலும் உள்ள வீரர்கள் சதம் விளாசிய அடைவைப் பதிவுசெய்துள்ளது பாகிஸ்தான். பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் முதல் தடவையாக இந்தச் சம்பவம் பதிவாகியது.

இலங்கைக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் 3 இலக்குகளை இழந்து 555 ஓட்டங்களைப் பெற்றது. முதல் நான்கு இடங்களிலும் களமிறங்கிய வீரர்களான மசூட் 135 ஓட்டங்களையும், அபிட் அலி 174 ஓட்டங்களையும், அசார் அலி 118 ஓட்டங்களையும், பாபர் அசாம் 100 ஓட்டங்களையும் பெற்றனர். இதையடுத்தே முன்வரிசை வீரர்கள் நால்வர் சதம் விளா சிய அடைவை பாகிஸ்தான் படைத்தது. (ம)



## சச்சின், கங்குலி போன்று

# உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சை சந்திக்கவில்லை கோக்லி, ரோகித்

## இயன் சப்பல் சீண்டல்



விராட் கோலியும், ரோஹித் சர்மாவும் துடுப்பாட்டத்தில் ஓட்டங்களை வாரிக் குவிக்கலாம். சச்சின், கங்குலி சந்தித்த அளவுக்கு உலகத் தரம் வாய்ந்த பந்துவீச்சை அவர்கள் சந்தித்திருப்பார்களா என்று ஆஸ்திரேலிய முன்னாள் தலைவர் இயன் சப்பல் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆஸ்திரேலிய முன்னாள் வீரரும், வர்ணனையாளருமான இயன் சப்பல் இணையத்தளம் ஒன்றுக்கு எழுதிய கட்டுரையில் ரோகித் சர்மா, கோக்லி இருவரையும் சீண்டியுள்ளார். அந்தக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

'ஒருநாள் போட்டிகளில் விராட் கோக்லியும், ரோகித் சர்மாவும் தான் இந்தியாவின் தலைசிறந்த வீரர்கள் என்ற வாதம் எழுந்துள்ளது. உண்மையில் சச்சின் ரெண்டுல்கர், சவுரவ் கங்குலி கூட்டணி 15 ஆண்டுகளாக சர்வதேச பந்துவீச்சாளர்களைக் கிழித்து எறிந்ததைப் போல், அவர்கள் சந்தித்த தரமான சவாலான பந்துவீச்சைப் போல் ரோகித் சர்மா, விராட் கோலி சந்தித்திருப்பார்களா?

சச்சின், கங்குலி இணை கிரிக்கெட்டில் கோலோச்சிய காலத்தில், ஒவ்வொரு சர்வதேச அணியிலும் இரு தரமான, மிகச்சிறந்த வேகப்பந்துவீச்சாளர்கள் இருந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. கங்குலியும், சச்சினும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கும் போது, உலகின் தரமான இரு வேகப்பந்துவீச்சாளர்களின் சவாலான பந்துவீச்சை எதிர்கொண்டார்கள்.

பாகிஸ்தானில் வாசிம் அக்ரம், வக்கார் யுனிஸ், மேற்கிந்தியத் தீவுகள் அணியில் கர்ட்லி ஆம்புரோஸ், கோர்ட்னி வால்ஷ், ஆஸ்திரேலியாவில் மெக்ராத், பிரட் லீ, தென் ஆப்பிரிக்காவில் ஷொன் பொலக், ஆலன் டொனல்ட், இலங்கை அணியில் சமிந்தா வாஸ், லசித் மலிங்க ஆகியோரின் பந்துவீச்சு வீரர்களின் திறமைக்குச் சோதனை.

'ஒருவரின் எதிராளியை வைத்தே அவரை மதிப்பிடலாம்' என்று பாகிஸ்தானின் முன்னாள் கேப்டன் இம்ரான் கான் அடிக்கடி ஒரு வார்த்தையைக் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில் தரமான எதிரணி பந்துவீச்சாளர்களை கங்குலியும், சச்சினும் எதிர்கொண்டபோதே அவர்கள் யார் என்பதை மதிப்பிடலாம்.

சச்சின் விளையாடிய இன்னிங்ஸ் அளவுக்கு கோக்லிக்கு அதே இன்னிங்ஸை வழங்கி, கங்குலி விளையாடிய அளவுக்கு ரோகித் சர்மாவுக்கு அதே இன்னிங்ஸை வழங்கி புள்ளி விவ ரங்களை ஒப்பிட்டால் ரன் அடிப்படையில் கோக்லி, ரோகித் முதலிடத்தில் இருப்பார்கள். கோலியும், ரோகித் சர்மாவும் விவாதத்துக்கு இடமின்றி ஒருநாள் போட்டிகளில் சிறந்த வீரர்கள்தான்.

கோக்லி, ரோகித் சர்மா ஆகியோரும் சேர்ந்து ஒருநாள் போட்டி, டி20 போட்டியில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளார்கள். கோக்லி டி20, ஒருநாள் போட்டியில் நம்பமுடியாத அளவுக்குச் சராசரி வைத்துள்ளார். ஆனால், நேர்மையாகப் பரிசீலித்தால், சச்சின் மிகக் குறைந்த அளவுதான் ரி20 போட்டியில் விளையாடினார். டி20 போட்டிகள் வரும் முன்பே கங்குலி தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.

அதுமட்டுமல்லாமல், ஒருநாள் போட்டிகளில் உலக அளவில் இரட்டைச் சதம் அடித்த முதல் வீரர் சச்சின் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அதைக் காட்டிலும் ரோகித் சர்மா 3 இரட்டைச் சதம் அடித்திருக்கலாம், இலங்கைக்கு எதிராக 264 ஓட்டங்கள் சேர்த்த ரோகித்தின் ஆட்டம் ஈடன் கார்டன் ரசிகர்களை உற்சாகப்படுத்தியது.

கிரிக்கெட்டின் மாஸ்டர் என்று அழைக்கப்படும் சச்சின், ஒருபோதும் பவுன்ஸர் ஆடுகளத்தில் தனக்குரிய பேக்புட் ஷாட்டை ஆடாமல் அவர் பின் வாங்கியதில்லை. அதுபோல, கங்குலியைப் போன்று ஆப் சைடில் சிறப்பாக விளையாடும் வீரர்களைப் பார்க்க முடியாது.

விராட் கோக்லியின் முத்திரை என்பது, அதிகமான ஸ்கோரும், தொடர்ச்சியான வெற்றிகளும்தான். பந்துவீச்சாளர்கள் வீசும் பந்துகளை அனைத்துத் திசைகளிலும் அடித்துப் பறக்க விட்டு, கோக்லி தண்டனை அளிப்பார். துடுப்பாட்டத்தை ஒரு பெரிய சுமையாகக் கருதாமல் விளையாடக் கூடிய கோக்லி, நல்ல சராசரி வைத்துள்ளார்.

அதேசமயம் ரோகித் சர்மா அதிகமான முயற்சிகள் எடுக்காமல் விளையாடி அதன்பின் சாதித்தவர். கெயில் போன்று வலிமையான ஷொட்களை ஆடாவிட்டாலும், அவருக்கு இணையாக சிக்ஸர்களை அடித்து, உயர்ந்த சராசரியை வைத்துள்ளார்' - என்றார். (ம)



வாகனம் விற்பனைக்கு
**10 Wheel டிப்பர்**
வாகனம் விற்பனைக்குண்டு.
077 717 7245

**Techno World**
(பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)
A/L 2022 தொழில்நுட்ப பிரிவு
புதிய பிரிவு ஆரம்பம்
23.12.2019 காலை 9.15 am
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
தொடர்புகளுக்கு - 077 017 5346, 077 170 3549
C12038(16/17)

**பணியாளர் தேவை**
தமிழ்க்குரல் ஊடகநிறுவனத்திற்கு அனுபவமும், ஆர்வமும் உள்ள
- வீடியோ படிப்பிடிப்பாளர்
- வீடியோ எடிட்டர்
- செய்தி ஆசிரியர்

பதவிகளுக்கு தகுதியானவர்கள் தேவை.
சுயவிபரங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தகுதிக்கு ஏற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
மின்னஞ்சல் முகவரி :
info@tkural.com
தொடர்புகளுக்கு : 077 413 5036

விசேட இறுதி கருத்தரங்குகள்
SLAS
மாதிரி வினாத்தாள்கள்
திங்கள்- வெள்ளி வரை
பி.ப. 5.00 - பி.ப. 7.00
புகையிரத பாதுகாவலர்
திங்கள்- வெள்ளி வரை
பி.ப. 4.30 - 7.00
T.P: 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ் ஆஸ்பத்திரி வீதி
[கொமர்ஷல் வங்கியருகில்]



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.